Follow us

# தமிழன்
THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 491 பிலவ வருடம், பங்குனி மாதம் 17ஆம் திகதி வியாழக்கிழமை (31.03.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 27 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30


## நீர் விநியோகம் தடைப்படக்கூடும்

### நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவிப்பு

மின்சார விநியோகம் துண்டிக்கப்படும் காலப்பகுதியில் மின்பிறப்பாக்கிகளுக்குத் தேவையான டீசல் கிடைக்காவிடின், பல பகுதிகளுக்கான நீர் விநியோகத்தில் இடையூறு ஏற்படக்கூடுமென தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

02 பக்கம்

## எரிவாயு சிலிண்டர் விலை அதிகரிக்கும்?

### அமைச்சரவையிடம் கோரிக்கை முன்வைத்திருப்பதாக கூறுகிறார் லிட்ரோ நிறுவனத் தலைவர்



சமையல் எரிவாயுவின் விலையை மீண்டும் அதிகரிப்பது தொடர்பில் தமது நிறுவனம் அமைச்சரவையிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் தேசர ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

# நீண்ட நேர மின்வெட்டு தொடரும் நிலைமை!



மக்கள் பெரும் அவதி

தூர இடங்களுக்கான பஸ் போக்குவரத்து நிறுத்தம்

தனியார் நிறுவனங்கள் ஸ்தம்பிதம்

பாரிய தொழிற் சாலைகள் செயலிழப்பு

பாடசாலை மாணவர்கள் பாதிப்பு

• யோ.தர்மராஜ்

நாட்டில் நேற்று அமுலாகிய 10 மணிநேரத்துக்கு மேலான தொடர் மின்வெட்டு அடுத்த வாரமும் தொடரலாமென்று இலங்கை மின்சார சபை தகவல்கள் தெரிவிக்கின்றன. தினமொன்றுக்கு சுமார் 14 மணிநேரம் வரையான மின்வெட்டு இடம்பெறலாமென சொல்லப்படுகிறது. போதியளவு எரிபொருள் இல்லாத காரணத்தினால் மின்சார உற்பத்தி செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளமையும்,...

02 பக்கம்

## இலங்கைக்கு விரைவான உதவி வழங்க இந்தியா 'ஓவர் ரைம்' வேலை செய்கிறது!

### இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்ஷங்கர் கொழும்பில் தெரிவிப்பு



பாரதூரமான பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முயற்சிக்கும் இலங்கைக்கு 'நேரம் முக்கியமானது' என்பதை உணர்ந்து, இந்தியா அதன் உதவியை விரைவுபடுத்த 'ஓவர் ரைம்' வேலை செய்கிறது - என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர் கொழும்பில் இந்திய செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்திருக்கிறார். அவர் மேலும் கூறியுள்ளதாவது, இலங்கையின் இதுபோன்ற சூழ்நிலையில், சாதாரண வேகத்தில் விடயங்களைச் செய்யமுடியாது.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



'இப்போ மின்சாரமும் தவணைமுறையில் தான் கிடைக்குது பாருங்கோ...'

## தேயிலை உற்பத்தியும் ஸ்தம்பிக்கும் அபாயம்



02 பக்கம்

## மண்ணெண்ணெய் நிரப்புவதில் மோசடி

### விநியோகத்தை மட்டுப்படுத்த பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை

மண்ணெண்ணெய் விநியோகம் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறுவதாக பெற்றோலியக் கூட்டுதாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில்,..

02 பக்கம்

## இ.தொ.கா. தலைவராக செந்தில் தொண்டமான் தெரிவு



02 பக்கம்

## டீசல் வரிசையில் நிற்க வேண்டாம்

### பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கோரிக்கை

சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் இல்லாமை காரணமாக இன்றையதினம் வரிசையில் நிற்க வேண்டாமென மக்களை கேட்டுக்கொள்வதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## அரசாங்கத்திற்கு இப்போது கொரோனா வைரஸ் தொற்று

### எள்ளி நகையாடுகிறார் விமல்



• யோ. தர்மராஜ்

அரசாங்கம் தற்போது விழிப்புலனற்று, செவிப்புலனற்று கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## எரிபொருளை விரைவாக வழங்கினால் மின்வெட்டு நேரத்தை குறைக்கலாம்

### மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் அறிவிப்பு

• யோ. தர்மராஜ்

மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருள் முறையாக வழங்கப்படாவிட்டால் வார நாட்களில் 12 – 15 மணிநேர மின்வெட்டு அமுல்படுத்தப்படும். அரசாங்கம் எரிபொருளை விரைவாக வழங்க நடவடிக்கை...

02 பக்கம்

## எரிபொருளுக்காக மலையகத்தில் போராட்டங்கள்

03,06 பக்கம்

### உஷ்



நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையினை கருத்திற்கொண்டு பொது முடக்கமொன்றை அமுல்படுத் துமாறு அரச மேலிடத்திற்கு பல்வேறு தரப்பிலிருந்தும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், உடனடியாக பொது முடக்கமொன்றுக்கு சென்றால் சுற்றுலாத்துறை உட்பட்ட பல துறைகள் பாதிக்கப்படுமென அரசாங்கம் கருதுகிறது. இதனால் பொதுமுடக்க யோசனை மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

## கட்டண நிலுவையுள்ள வீடுகளுக்கு மின் தடை

### மின்சார சபை தீர்மானம்

மின் கட்டணத்தை பல மாதங்களாக செலுத்தாத வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கான மின்சாரத்தை துண்டிக்க இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

02 பக்கம்




# 2021இல் கலாபூஷணம் விருது பெறும் தமிழ்க் கலைஞர்கள்

கலைத்துறையில் சிறந்த பணியாற்றும் கலைஞர்களுக்கு வருடந்தோறும் கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றின் ஏற்பாட்டில் 'கலாபூஷணம்' என்னும் விருது வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் 2021ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருது வழங்கும் வைபவம் இன்று (31) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்படி 2021ஆம் ஆண்டு கலாபூஷணம் விருது பெறுவோரது விபரம் வருமாறு-

அருணாசலம் தியாகலிங்கம் - பண்டாரவளை(பதுளை) – இலக்கியத்துறை, இராமலிங்கடப்பன் முருகேசு – புத்தளம் – வில்லிசை நாடகம், மரபிசைபாடல் பாடுதல் - திருமதி ஜெகதீஸ்வரி நாதன் – அம்பாறை – இலக்கியத்துறை, திருமதி இராமநாதன் சியாமளாதேவி – மாத்தளை – இசைத்துறை, மாரிமுத்து கோபாலன் – கண்டி - நாட்டுப்புறக்கலை, நல்லமுத்து கல்யாண சுந்தரம் திருச்செல்வம் - கொழும்பு - 05 இலக்கியத்துறை, ஆறுமுகம் இரத்தினவேலோன் - கொழும்பு 06 - இலக்கியத்துறை, திருமதி ரேணுகாதேவி செல்வபுத்திரன் - திருகோணமலை – பரதநாட்டியத்துறை, அம்பலவாணர் கௌரிதாசன் - திருகோணமலை - இலக்கியத்துறை, இராசையா கிருஷ்ணபிள்ளை - மட்டக்களப்பு - இலக்கியத்துறை, சின்னத்துரை வேதவனம் – முல்லைத்தீவு – நாடகத்துறை, முத்துக்குமாரு தியாகராஜா - கிளிநொச்சி - நாடகத்துறை (ஒப்பனை), நாகலிங்கம் தியாகராசா - வவுனியா - இலக்கியத்துறை, அம்பலவாணர் ஜெயராமன் – யாழ்ப்பாணம் – இசைத்துறை, பொன்னுத்துரை ஸ்ரீவாமதேவன் – சாவகச்சேரி (யாழ்ப்பாணம்) – இசைத்துறை

## நீர் விநியோகம்...

பிலியந்தலை, பன்னிப்பிட்டிய, மஹரகம, ஹோக்கந்தர மற்றும் பத்தரமுல்லை உள்ளிட்ட சில பகுதிகளுக்கு நீர் விநியோகிப்பதில் சிக்கல் ஏற்படக்கூடும் என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மேற்கு மற்றும் மத்திய வலயத்திற்கு பொறுப்பான பிரதி பொது முகாமையாளர் கப்புருகே தெரிவித்தார்.

டீசல் இன்மையால் ஏற்கனவே பல சிரமங்களுக்கு மத்தியில் நீர் விநியோகம் முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறினார்.

எவ்வாறாயினும், தற்போது அத்தியாவசியத் தேவையாக நீர் விநியோகம் அமுல்படுத்தப்பட்டு இருப்பதால், மின்பிறப்பாக்கிகளை இயக்குவதற்கான டீசல் வழங்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் பிரதி பொது முகாமையாளர் குறிப்பிட்டார்.

இதனிடையே, வறட்சியான காலநிலை காரணமாக நாளாந்த நீர்த் தேவை அதிகரித்துள்ளது. எனினும், மிக சிக்கனமாக நீரை பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

## இ.தொ.கா. தலைவராக...

*(க.கிஷாந்தன், பி.கேதீஸ்)*

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக செந்தில் தொண்டமானும், தவிசாளராக நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரனும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அக்கட்சியின் தேசிய சபைக் கூட்டம் நேற்று (30) முற்பகல் கொட்டகலையிலுள்ள சி.எல்.எவ் வளாகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் உட்பட உயிர்நீத்த கட்சி செயற்பாட்டாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், பிரமுகர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன்பின்னர் காங்கிரஸின் முக்கிய பதவிகளுக்கான தேர்வுகள் இடம்பெற்றன.

இதன்போது கட்சியின் தலைவராக செந்தில் தொண்டமான் தெரிவு செய்யப்பட்டார். தவிசாளராக நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவுசெய்யப்பட்டார்.

நிதிச்செயலாளர் பதவியும் மருதபாண்டி ராமேஷ்வரன் வசமே உள்ளது. இப்பதவிகளுக்கு போட்டி நிலவவில்லை. அதன்பின்னர் பிரதித் தலைவர் உட்பட இதர பதவிகளுக்கு வாக்கெடுப்பு மூலம் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதன்படி பிரதித் தலைவர்களாக மத்திய மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான கணபதி கனகராஜும், அனுசியா சிவராஜாவும் தெரிவாகினர். பிரதித் தவிசாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ராஜதுரையும், அரசியல் தேசிய அமைப்பாளராக முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினர் சக்திவேலும், தொழிற்சங்க பிரிவு தேசிய அமைப்பாளராக லோகதாஸ் மற்றும் பிரதி பொதுச்செயலாளராக செல்லமுத்துவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அரசியல் பிரிவு உதவி தேசிய அமைப்பாளராக ராஜமணி பிரசாந்தும், தொழிற்சங்க பிரிவு உதவி தேசிய அமைப்பாளராக பழனி சசிக்குமாரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

காங்கிரஸின் போசகர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் மற்றும் சிவராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பிலிப்குமார், யோகராஜ், செண்பகவள்ளி, சச்சிதானந்தன், அசோக்குமார், சிவலிங்கம், பாரத் அருள்சாமி, சிவஞானம், பாஸ்கரன், மார்கட் மேரி, ராஜமணி, செல்லசாமி திருகேதீஸ் ஆகியோர் உபதலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அரசாங்கத்திற்கு...

கோட்டே மாநாயக்க தேரரை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் தற்போது விழிப்புலனற்று செவிப்புலனற்று நோய்வாய்ப்பட்டுள்ளது. அரசுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது போன்றே எங்களுக்கு தெரிகின்றது. மார்ச் 5 ஆம் திகதிக்கு பின்னர் மின்வெட்டில்லை எனக் கூறினர். இதுவரை 5 ஆம் திகதி உதயமாகவில்லை என்றே நினைக்கின்றோம். அதேபோன்று, தேவையானளவு எரிபொருள் கையிருப்பில் இருப்பதாக வலுசக்தி அமைச்சர் கூறினார். ஆனால், தற்போது டீசல் இல்லை அதனால் வரிசையில் நிற்க வேண்டாம் என கோருகின்றனர். அவ்வாறாயின் அரசாங்கம் பார்வையிழந்து, காதுகேழாத, மணமிழந்து ஏதேனும் நோய்வாய்ப்பட்டுள்ளது.

இவ்வாறான அரசாங்கத்திற்கு நாட்டை கட்டியெழுப்ப முடியாது. எனவே, பார்வையுள்ள, காது கேட்கக்கூடிய மற்றும் மனமுள்ளவர்கள் இணைந்து நாடாளுமன்றத்தில் இந்த அரசாங்கத்தை தோற்கடிக்க வருமாறு அழைப்புவிடுக்கின்றோம். நாட்டை மேலும் சீர்குலைக்க முடியாது. புதிய அரசாங்கத்தை உருவாக்க வேண்டும்.

மின்வெட்டு மாத்திரமல்லாது, இந்தியாவினால் வழங்கப்பட்ட எரிபொருள் தரம் குறைந்தது எனக் கூறப்படுகின்றது. நட்பு நாடு என்றால் உதவி செய்வதாகக் கூறி கடனுக்கு பெறும்போது இவ்வாறு தரம் குறைந்த எரிபொருளை வழங்குவார்களா?

நாட்டை ஆட்சி செய்யும் ஆட்சியாளர் என்பது பொறுப்பாளியாகும். நாட்டை பொறுப்பேற்கும் போது இருந்த நிலைமையை விட சிறந்த முறையிலேயே நாட்டை ஒப்படைக்க வேண்டும். தங்களுடைய ஆட்சிகாலத்தில் ஏற்படும் பாதிப்புக்கு மாத்திரமே பொறுப்புக் கூறுவதாகவும் எதிர்கால பொருளாதாரம் குறித்து பொறுப்புக் கூற முடியாது என தட்டிக்கழிக்க முடியாது.

எனவே, இனியும் மக்கள் காத்திருக்க மாட்டார்கள். ஆட்சியிலுள்ள அனைத்து அமைச்சர்கள் அனைவரையும் வெளியேறுமாறு மக்கள் கூற வேண்டும். இல்லையேல் எங்களுடைய பகுதிக்கு வர வேண்டாம் என மக்கள் எச்சரிக்க வேண்டும்.

## எரிபொருளை..

எடுத்தால் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் நேரத்தை எங்களால் குறைக்க முடியும் என மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் இந்துவர தெரிவித்துள்ளார்.

அத்தோடு, நாட்டில் எரிபொருளும் மழையும் இல்லையேல் புத்தாண்டு காலத்தில் இருளில் இருக்க வேண்டி வரும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

நாட்டில் தற்போது நீர் மின்உற்பத்தியால் ஆயிரத்து 200 மெகா வோர்ட் மின்சாரத்தை வழங்குவதற்கு முடிந்தாலும் நீர் இன்மையால் பகல் நேரத்தில் 300 மெகா வோர்ட் மற்றும் இரவில் 700 மெகா வோர்ட் மின்சாரத்தையே வழங்க முடியும். அதேபோன்று, எரிபொருள் மின் உற்பத்தியால் ஆயிரத்து 700 மெகா வோர்ட் மின்சாரத்தை வழங்க முடிந்தாலும் எரிபொருள் வழங்கப்படாதமையினால் ஆயிரம் மெகா வோர்ட் மின்சாரத்தையே வழங்க முடியும். ஆனால், நாளொன்றுக்கு 2 ஆயிரத்து 800 மெகா வோர்ட் மின்சாரம் தேவைப்படுகின்றன.

எனவே, மின் விநியோகத்தில் பாரிய தட்டுப்பாடு காணப்படுகின்றன. தற்போது களனி திஸ்ஸ மற்றும் மிதக்கும் மின் உற்பத்தி நிலையம் ஆகிய இரு நிலையங்களுக்கு மாத்திரம் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய எந்தவொரு நிலையத்திற்கும் எரிபொருள் வழங்கப்படவில்லை. அதேபோன்று, நேற்றும் இன்றும் எமக்கு எரிபொருள் கிடைக்காது.

அதன்படி, தற்போது 10 மணி நேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படும். நிலைமை மோசமடையும் போது 12 – 15 மணி நேர மின் வெட்டை அமுல்ப்படுத்தப்படும். எனவே, நாங்கள் மின்சாரம் வழங்கும் காலத்தை அறிவிப்பதே பொருத்தமானதாக இருக்கும்.

அரசாங்கம் எரிபொருளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுத்தால் மின் வெட்டு அமுல்ப்படுத்தப்படும் நேரத்தை எங்களால் குறைக்க முடியும். எரிபொருளும் மழையும் இல்லையேல் புத்தாண்டு காலத்தில் இருளில் இருக்க வேண்டி வரும்.

மக்களுக்கு உரிய முறையில் மின்சாரத்தை வழங்க முடியாவிட்டால் மின்சார சபை எதற்கு. எனினும், இந்த பொறுப்பை மின்சார சபையின் மீது மாத்திரம் சுமத்த முடியாது. மாறாக, பொறுப்பான அமைச்சு, பொது பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் நிதி அமைச்சு என அனைத்தும் பொறுப்பளிக்க வேண்டும் - என்றார்.

## இலங்கைக்கு...

எல்லாவற்றையும் வேகமாக கண்காணிக்க வேண்டும். எங்கள் இந்திய அரச கட்டமைப்பு கூடுதல் நேரம் வேலை செய்கிறது. முன்பு சில வாரங்கள் எடுக்கப்பட்ட வேலைகள் இப்போது சில நாட்களை எடுத்துக் கொள்கின்றன. அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக சமீபத்தில் இறுதி செய்யப்பட்ட இந்தியக் கடன் வரி 1 பில்லியன் டொலர் மிக விரைவில் செயல்படுத்தப்படும்.

இந்தியா இலங்கையின் முதன்மை கடன் வழங்குனராக இல்லாமல் இருக்கலாம். ஆனால் எமது நெருங்கிய அண்டை நாடாகும்.

நாங்கள் அதை (இலங்கை நெருக்கடியை) ஒரு விவேகமான, நல்ல அண்டை நாடு போல அணுகுகிறோம், அரசியலில் இருந்து விலகி இருக்கிறோம். 400 மில்லியன் டொலர் இந்திய நாணய பரிமாற்றம், 500 மில்லியன் டொலர் ஒத்திவைத்த கடன், எரிபொருளுக்கான 500 மில்லியன் கடன் மற்றும் சமீபத்திய பில்லியன் டொலர் கடன் செலுத்துகையை புதுடில்லி இந்த ஆண்டு நீடித்துள்ளது அல்லது எளிதாக்கியுள்ளது.

கடைசியாக எந்த நாட்டிற்காகவும் நாங்கள் இப்படி உதவியது எனக்கு நினைவில் இல்லை. இயற்கை பேரழிவுகள் அல்லது தொற்றுநோய்களின்போது நாங்கள் நாடுகளுக்கு உதவியுள்ளோம். ஆனால் இது வேறுபட்டது. இப்போது இலங்கையின் தேவைகள் அதிகம்.

இந்தியாவில் இருந்து தனியார்த்துறை முதலீடு உட்பட சமீபத்திய இருதரப்பு ஒப்பந்தங்கள் இலங்கையின் ஒட்டுமொத்த நிலையை பலப்படுத்தியது. இலங்கையின் மிக நெருங்கிய அண்டை நாடு என்ற ரீதியில் இங்கு முதலீடு செய்கிறது இந்தியா.

அரசியல் கைதிகளின் விடுதலை, காணி, காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அபிவிருத்தி ஆகிய நான்கு குறிப்பிட்ட விடயங்கள் தமிழர் தரப்பினர் ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை நீண்ட காலமாக தமிழர்களை கவலையடையச் செய்யும் விடயங்களாகும். இரு தரப்பினரும் குறிப்பிட்ட, செயல்படக்கூடிய புள்ளிகளை அடையாளம் கண்டு ஒப்புக்கொண்டுள்ளனர். அந்தப் பேச்சு தொடரும் வாய்ப்பிருப்பதால், அவற்றைத் தொடர்வது நல்ல யோசனை என்று நாங்கள் நினைக்கிறோம்.

இந்தப் பிரச்சினைகளின் மீதான நடவடிக்கை, நல்லிணக்கம் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆனால் அது வெறும் பேச்சுடன் முடிவடையக் கூடாது.

## தேயிலை உற்பத்தியும்...

மின்துண்டிப்பு 10 மணிநேரமாக அதிகரிக்கப்பட்டமை மற்றும் தேயிலை உற்பத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான டீசல் கிடைக்காமை உள்ளிட்ட காரணங்களினால் இன்றிலிருந்து (31) தேயிலை தோட்டங்களின் நாளாந்த செயற்பாடுகளை முழுமையாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தோட்ட அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தொழிற்சாலைகளில் மின்சாரத்தினூடாக இயங்கும் இயந்திரங்களினாலேயே தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுவதாகவும், அந்த இயந்திரங்களுக்காக நாளாந்தம் பெருமளவு டீசல் தேவைப்படுவதாகவும் அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தேயிலை கொழுந்தை எடுத்துச் செல்வது முதல் தேயிலை தூள் உற்பத்தி செய்வது வரையும் மின்சாரம் அவசியமாக காணப்படுகிறது. தேயிலைக் கொழுந்தை தேயிலை தூளாக மாற்றுவதற்கு உரிய காலநேரம் இருக்கிறது. அந்த காலத்துக்குள் தேயிலை தூளை உற்பத்தி செய்யாவிட்டால், தொழிற்சாலை இயந்திரங்களிலுள்ள பச்சை தேயிலை கொழுந்துகள் முழுமையாக வீணாகிவிடும் என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், தேயிலை கொழுந்துகளை உரிய நேரத்தில் பறிக்காவிட்டால் அவை அதிகளவு வளர்ச்சியடைந்து, முதிர்ந்த இலைகளாக மாறிவிடும். அதன் பின்னர் அவற்றை வெட்டி நீக்கவேண்டிய நிலை ஏற்படும்.

இதன் காரணமாக, தேயிலை உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு தேவையான டீசலை பெற்றுக்கொடுக்க திட்டமொன்றை வகுக்குமாறும் தோட்ட அதிகாரிகள் கோரியுள்ளனர்.

## டீசல் வரிசையில்...

இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 37,500 மெற்றிக் தொன் டீசலை, திட்டமிட்ட வகையில் இறக்க முடியாது போனதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றும் இன்றும் டீசலை பெற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிடுகின்றார்.

அத்தியாவசிய தேவைகளுக்கான டீசல் கையிருப்பில் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

எவ்வாறாயினும், எந்தவித தட்டுப்பாடும் இன்றி பெற்றோலை விநியோகிக்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## நீண்ட நேர...

நீர் மின்னுற்பத்தி குறைவடைந்தமையும் இவற்றுக்கான காரணங்களென சொல்லப்படுகிறது. அதேசமயம் இலங்கை வந்திருந்தாலும் திட்டமிடப்பட்ட வகையில் கப்பல்களில் இருந்து டீசல் இறக்காமையும் இதற்கான காரணமென சொல்லப்படுகிறது.

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின் துண்டிப்பு காரணமாக தூர மற்றும் குறுந்தூர போக்குவரத்துகள், தொழிற்சாலைகள், பொருள் விநியோகம், அலுவலக செயற்பாடுகள், வைத்தியசாலை செயற்பாடுகள், ஆடைத் தொழிற்சாலைகள், பேக்கரி உற்பத்திகள், விவசாயம், மரக்கறி விநியோகம், ஹோட்டல் துறை, எரிவாயு விநியோகம், பாடசாலை போக்குவரத்து மற்றும் கற்றல் செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு துறைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

### தூர மற்றும் குறுந்தூர போக்குவரத்துகள்

நாட்டில் நேற்று (30) மற்றும் இன்று (31) ஆகிய இரு நாட்களுக்கு தேவையான டீசல் இல்லாமையினால் பொது மக்களை வரிசைகளில் வந்து காத்திருக்க வேண்டாம் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இதனால், போக்குவரத்துக்கு தேவையான எரிபொருள் இல்லாதமையினால் தூர போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்கள் போக்குவரத்திலிருந்து விலகியுள்ளன. இதனால், மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதேவேளை, எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், நாட்டின் பல பகுதிகளில் போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதுடன், குறுந்தூர போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், முச்சக்கரவண்டி போக்குவரத்துகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டதால் வாடகைக்குச் செல்லும் பயணிகளும் பாதைகளில் நீண்ட நேரம் காத்திருந்ததுடன், வாகனங்களின்றி நடந்து செல்லும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

### டீசல் - நீர் தட்டுப்பாட்டால் மின் உற்பத்தி பாதிப்பு

போக்குவரத்துக்கு மாத்திரமல்ல மின் உற்பத்திக்கும் தேவையான டீசல் இல்லாதமையினால் நீர் மின் உற்பத்திக்கு மின் உற்பத்திகள் சீர்குலைந்துள்ளன. இதனால் தற்போது 10 மணித்தியாலத்திற்கும் அதிக நேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் மின்சார உற்பத்திக்கு போதிய டீசல் மற்றும் நீர் கிடைக்காதமையினால், 2 – 3 மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், நாளுக்கு நாள் எரிபொருள் தட்டுப்பாடு நிலைமை தொடர்வதால் தற்போது முதல் 8 – 10 மணி நேரத்துக்கும் அதிகமான நேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த நிலைமை தொடருமாக இருந்தால் நேற்று (30) அமுல்படுத்தப்பட்ட 10 மணி நேர மின்வெட்டு அடுத்த வாரத்திலும் தொடரலாம் என்பதோடு, மின்வெட்டு 12 மணி நேரமாக அதிகரிக்கப்படலாம் என்றும் பொது பயன்பாட்டு ஆணைக்குழு தலைவர் தெரிவித்துள்ளார்.

### தொழிற்றுறை மற்றும் பாடசாலைகள்

மின்வெட்டின் காரணமாக பல தொழில் நிறுவனங்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. குறிப்பாக, மின்வெட்டு அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதியில் பகல் மற்றும் இரவு நேரங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனால், மின்சாரத்தை நம்பி முன்னெடுக்கப்படும் ஆடைத்தொழிற்சாலைகள் உள்ளிட்ட பல தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பாடசாலைகளிலும் பகல் நேரத்தில் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கப்பட முடியாத அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதால் மாணவர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். நாளுக்கு நாள் மின் வெட்டு நேரம் அதிகரிக்கப்படுவதால் மாலை நேரங்களில் முன்னெடுக்கப்படும் வகுப்புகளும் தற்போது தடைப்பட்டுள்ளன.

### வைத்தியத்துறை, அரச மற்றும் தனியார் நிறுவனங்கள்

வைத்தியசாலைகளுக்கான போக்குவரத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் மருந்து விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளதாக மருந்தக வட்டார தகவல்கள் தெரிவித்தன. இதேவேளை, மின் வெட்டு காரணமாகவும் வைத்தியத்துறை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இதேவேளை, அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கான போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளதால் ஊழியர்களின் வருகையும் குறைவடைந்துள்ளதால், சேவைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. இந்த மின்வெட்டின் காரணமாக பல தொழில் நிறுவனங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

### மின்தடையின்போது இணைய வசதி தடைப்படும்

தொலைபேசி கோபுரங்களின் ஜெனரேட்டர்களுக்கான டீசல் கிடைக்கப் பெறாமையால், இன்று முதல் நாடளாவிய ரதியில் தொலைபேசி கோபுரங்களில் மின்தடை ஏற்படும்போது அவற்றின் 3 ஜி மற்றும் 4 ஜி டிரான்ஸ்மிட்டர்களின் (குறுக்கீடு குறைப்பு அமைப்புகள்) செயலிழக்கப்படும்.

இதற்காக டீசல் ஜெனரேட்டர் பயன்படுத்தப்பட்ட போதிலும் போதிய அளவு டீசல் இல்லாமையால் காப்பு பேட்டரி மூலம் கிடைக்கும் சக்தி போதுமானதாக இல்லை.

இவை செயலிழக்கப்படும்போது 3ஜி, 4ஜி வலையமைப்புகள் அதிவேகங்களில் செயற்படாது எனவும் இதன் விளைவாக அதிக சனத்தொகை உள்ள பகுதிகளில் சிக்னல் குறுக்கீடு ஏற்பட்டு 2ஜி (384 அல்லது அதிகபட்சமாக 48 கிலோபைட் ஒரு வினாடி) வேகத்தில் இயங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மின்தடை ஏற்படும்போது, ஜெனரேட்டர், பவர்பேங்கில் வோல்டேஜ் அதிகரிப்பு அல்லது வேறு வழிகளில் இயங்கும் ரவ்டர் இயக்குவதில் எந்தப் பயனும் இல்லை.

### பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அறிவிப்பு

நிலவும் மின்சார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்காக இன்றும் நாளையும் அரச துறை ஊழியர்களுக்கு வீட்டிலிருந்து வேலை செய்யும் முறையை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முன்மொழிந்துள்ளது.

வீட்டிலிருந்து வேலை செய்யும் முறையை பின்பற்றினால் மின்வெட்டு காலத்தை இரண்டு அல்லது மூன்று மணிநேரம் குறைக்க முடியும் என அதன் தலைவரான ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.

அலுவலகங்கள் செயற்படுவதற்கு மின்வெட்டு நேரத்தில் மின்பிறப்பாக்கிகள் பயன்பாட்டில் இருப்பதாகவும், இதற்குப் பயன்படுத்தப்படும் டீசலின் அளவைக் குறைத்து, நாளாந்த போக்குவரத்து சேவைகளைக் குறைப்பதன் மூலம், டீசல் இருப்புகளை மின் உற்பத்தியை நோக்கி செலுத்த முடியும். இந்திய கடன் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட எரிபொருள் கப்பல் இன்று நாட்டை வந்தடையும் எனவும், நாளை முதலாம் திகதி இறக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே நேற்றும் இன்றும் சவாலான காலகட்டமாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். எவ்வாறாயினும், மருத்துவமனைகள் போன்ற முக்கியமான உள்கட்டமைப்புகள் மின் தடைகளை எதிர்கொள்ளாது. அதே நேரத்தில் சுதந்திர வர்த்தக வலயங்கள் மின்வெட்டுகளை எதிர்கொள்ளக் கூடும் என அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு மாதங்களில் அதிகளவிலான வளங்களைப் பயன்படுத்தியதன் காரணமாக நீர்மின் உற்பத்தி கணிசமாகக் குறைந்துள்ளது. காசல்ரீ நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 7 வீதமாகவும், கொத்மலை 20 வீதமாகவும், சமனலவெவயில் 11 வீதமாகவும், மொத்த நீர் ஆதாரங்கள் 27 வீதமாகவும் குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். நீர்மின் உற்பத்தி 325 மில்லியன் அலகாக உள்ளதாகவும், அது 200 மில்லியன் அலகுகளை எட்டும்போது, நீர் மின் உற்பத்தியை நிறுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். எரிசக்தி நெருக்கடி மோசமடைந்து வருவதாகவும், காலப்போக்கில் எச்சரிக்கப்பட்டும் பொதுமக்களும் நிறுவனங்களும் அதன் தாக்கத்தைத் தணிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அந்நிய செலாவணி நெருக்கடியில் இருந்து மின் நெருக்கடி உருவாகிறது என்றும், பல நாட்களுக்கு முன்னர் வந்த எரிபொருள் ஏற்றுமதி இன்னும் வெளியிடப்படவில்லை, ஏனெனில் பங்குகளை வெளியிடுவதற்கு டொலர்களை பெற முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

### தொலைத்தொடர்பு கோபுரங்களை இயக்க டீசலை வழங்குக

மின்வெட்டு அமுல்படுத்தப்படும் காலங்களில், தொலைத்தொடர்பு கோபுரங்களை செயற்படுத்துவதற்கு தேவையான டீசலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், குறித்த கோபுரங்களை செயற்படுத்துவதற்காக 3 ஆயிரம் லீற்றர் டீசல் மின்பிறப்பாக்கிகளுக்கு விடுவிக்கப்பட்டதாக அமைச்சின் செயலாளர் ஜயந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

### இன்று 13மணிநேர மின்வெட்டு

இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நீர்நிலைகளில் நிலவும் வறட்சி காரணமாக இன்று நாடு முழுவதும் 13மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்படுமென இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு நேற்று மாலை அறிவித்தது.

## கட்டண நிலுவையுள்ள...

அதற்கமைய, மின்கட்டணத்தை செலுத்தாத வீடுகளின் விபரங்களை சேகரித்து அவற்றின் மின்சார இணைப்புகளை துண்டிக்கும் பணிகளை இலங்கை மின்சார சபை ஆரம்பித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள பல வீடுகளில் நேற்று மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா தொற்று காரணமாக சில வாடிக்கையாளர்கள் பல மாதங்களாக கட்டணம் செலுத்தவில்லை எனவும், அவர்களுக்கு சில காலம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபை கடும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகவும், நிலுவைத் தொகையான மின்சார கட்டணத்தை மீளப் பெற வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மண்ணெண்ணெய்...

மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பில் செய்தியாளர்கள் வினவியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பஸ்கள் உள்ளிட்ட கன ரக வாகனங்களுக்கு தேவையை மீறி மண்ணெண்ணெய் நிரப்பும் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்தே, மண்ணெண்ணெய் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## எரிவாயு சிலிண்டர்...

ஜனாதிபதி ஊடகப் பிரிவில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சமையல் எரிவாயு சிலிண்டருக்கான விலை அதிகரிப்பது குறித்து அமைச்சரவை இதுவரை அனுமதி வழங்கவில்லை என அவர் கூறினார்.

சமையல் எரிவாயு விலை அதிகரிப்பு தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு தற்போது அதிகாரம் கிடையாது எனவும் கூறிய அவர், விலை அதிகரிப்பதற்கான அனுமதியை அமைச்சரவையே வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இதன்படி, கடந்த திங்கட்கிழமையே தாம் இந்த கோரிக்கையை விடுத்ததாகவும் அவர் தெரிவித்தார். எவ்வளவு விலை அதிகரிப்பு என்பது குறித்த தகவலை வெளியிட அவர் மறுப்பு தெரிவித்தார்.

# அரசுக்கு எதிராக பண்டாரவளையில் வெடித்தது மக்கள் போராட்டம்

## அமைச்சர் நாமலின் வருகை நிறுத்தம்

### வந்தால் தாக்குவோமென பொதுமக்கள் எதிர்ப்புக் கோஷம்





(பதுளை செய்தியாளர்)

எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்த பொதுமக்கள் பண்டாரவளை நகரை முற்றுகையிட்டு அரசுக்கு எதிராக நேற்று (30) மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதன் காரணமாக பண்டாரவளை நகரில் நீண்ட நேரம் வாகன நெரிசல் ஏற்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸார் முயற்சித்தபோதும் அது முடியாமற்போனது.

பண்டாரவளை - வெலிமடை பிரதான வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக எரிபொருளை பெற்றுக்கொள்ள பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். அவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் இணைந்துகொண்டனர்.

இதேவேளை, பண்டாரவளையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்தை திறப்பதற்காக விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று அங்கு வருகைதரவிருந்தார்.

அவரது வருகைக்கு பொதுமக்களால் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. அமைச்சர் அங்கு வந்தால் தாக்குவோமென கோஷங்கள் எழுப்பப்பட்டன. இதனையடுத்து திறப்புவிழா நிகழ்வு இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆடைகளின் விலை 40 வீதத்தால் உயர்வு

## 600 ரூபாவுக்கு விற்கப்பட்ட நூலின் விலை 1,800 ஆக அதிகரிப்பு

(நா. தினுஷா)

மின்துண்டிப்பு, டொலர் நெருக்கடி மற்றும் மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு ஆகிய காரணங்களினால் தைக்கப்பட்ட உள்நாட்டு ஆடைகளின் விலைகள் 40 வீதத்தால் அதிகரிக்கப் பட்டுள்ளதாக அகில இலங்கை தொழிற்சாலை உரிமையாளர் சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப் பாளர் நிலுக்ஷ குமார தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, மஹரகமவில் சந்தையில் தைக்கப் படாத துணிகளின் விலை 200 ரூபாவிலிருந்து 300 ரூபா வரையிலும், தைக்கப்பட்ட ஆடைகள் 800 ரூபா முதல் ஆயிரம் ரூபா வரையும் பண்டிகைக் காலத்தில் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆடைகள் தைப்பதற்காக கொண்டுவரப்படும் மூலப்பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இவ்வாறான விலை அதிகரிப்புகளை தாங்கிக் கொள்ள முடியாது.

குறிப்பாக பொத்தான் விலை அதிகரிக்கப் பட்டுள்ளது. 600 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப் பட்ட நூல் இன்று ஆயிரத்து 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இந்த பொருட்களின் விலை இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் தைக்கப் பட்ட ஆடைகளின் விலையையும் அதிகரிக்க வேண்டி ஏற்படும். அதேபோன்று நாளொன்றுக்கு 10 மணிநேர மின்துண்டிப்பும் அமுல்படுத்தப் படுகின்றது.

இந்த நிலைமையில், சிறியளவான ஆடை தொழிற்சாலைகளை முன்னெடுக்கும் உரிமையாளர்கள் உற்பத்தியின்றி பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கவேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நெஸ்பி பிரபுவுக்கும் - எதிர்க்கட்சி தலைவருக்குமிடையில் சந்திப்பு



பிரித்தானிய கன்சர்வேட்டிவ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முன்னாள் பிரதி சபாநாயகருமான மைக்கல் மொரிஸ் - நெஸ்பி பிரபுவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (30) எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

தவறான நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் உட்பட அனைத்தும் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்கிரமரத்ன மற்றும் நிரோஷன் பெரேரா ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டனர்.

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்தும் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

# நவக்கிரியில் கடத்தப்பட்ட இளைஞன் கைகள் கட்டப்பட்ட நிலையில் மீட்பு

## சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்ப்பு

(யாழ். நிருபர்)

புத்தூர் மேற்கு, நவக்கிரியில் கடத்தப்பட்ட இளைஞர் இரண்டு நாட்களின் பின்னர் கைகள் கட்டப்பட்ட நிலையில் நேற்று மாலை மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நவக்கிரி சனசமூக நிலையத்தடியில் நேற்று மாலை மீட்கப்பட்ட அவர் சிகிச்சைக்காக அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புத்தூர் மேற்கு, நவக்கிரியைச் சேர்ந்த அருந்தவராசா சயந்தன் என்ற 30 வயது இளைஞரே கடந்த சனிக்கிழமை இரவு இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார் என்று அவரது உறவினர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 9.30 மணியளவில் மின்சாரம் தடைப்பட்டிருந்த நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வீட்டு வளாகத்திலிருந்து எவரோ பாய்ந்து வெளியே செல்வதை அவதானித்த இளைஞர் வீட்டுக்கு வெளியே சென்று பார்த்தார் என்றும், வெளியே சென்ற இளைஞரை வீட்டின் முன்புறம் உள்ள தோட்ட வெளியில் நின்றிருந்த மூவர் துரத்திச் சென்றனர் என்றும் உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

அதன்பின்னர் இளைஞர் வீடு திரும்பவில்லை. உறவினர்கள் தேடியபோது அவரது கைபேசி வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டது.

அதேநேரம், கடந்த 12ஆம் திகதி இளைஞரின் வீட்டுக்கு வந்து இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதில் வெட்டுக்காயத்துக்கு உள்ளான இளைஞரின் தந்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். அந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட இருவர் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர். சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், இரண்டு நாட்களின் பின்னர் இளைஞர் கைகள் கட்டப்பட்ட நிலையில் நேற்று மாலை நவக்கிரி சனசமூக நிலையத்துக்கு அண்மையில் மீட்கப்பட்டார்.

அவர் சிகிச்சைக்காக அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சையின் பின்னர் இளைஞரிடம் வாக்குமூலம் பெறப்படும் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

# இரண்டு ஜெனரேட்டர்கள் இருந்தும் இருளில் மூழ்கும் சாவகச்சேரி வைத்தியசாலை

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இரண்டு ஜெனரேட்டர்கள் (மின்பிறப்பாக்கி) இருந்தும் மின்தடை ஏற்படுகின்றபோது தொடர்ச்சியாக வைத்தியசாலை இருளில் மூழ்கி இருப்பதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இயங்கு நிலையில் காணப்பட்ட மின்பிறப்பாக்கி பழுதடைந்திருப்பதாகவும், மற்றொரு மின்பிறப்பாக்கி எந்தவிதமான இயக்கம் மற்றும் பராமரிப்பு இன்றி கடந்த 2018ஆம் ஆண்டு தொடக்கம் வைத்தியசாலைக்கு முன்பாக வெயில் மற்றும் மழையில் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. இதனால் நோயாளர்கள் பகல் மற்றும் இரவுவேளைகளில் மின் தடை ஏற்படும் நேரத்தில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். நாட்டில் தொடர்ச்சியாக மின்தடை அமுல்படுத்தப்பட்டுவரும் நிலையிலும் கூட வைத்தியசாலை நிர்வாகம் மின்பிறப்பாக்கிகளை சரியாக பராமரிக்காமல் அசண்டையீனமாக இருப்பதாக மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

# இந்திய வெளியுறவு அமைச்சருடன் ஐ.தே.க. தலைவர் ரணில் சந்திப்பு



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்ஷங்கர் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று (30) இடம்பெற்றது.

இலங்கைக்காக இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் கலந்துகொண்டார்.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

# யாழில் விபத்து: வர்த்தகருக்கு காயம்

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி பாலத்தடி பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் வர்த்தகர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரி நோக்கி மோட்டார் சைக்கிளில் வர்த்தகர் பயணித்தபோது அது கட்டுப்பாட்டை இழந்து பாலத்துடன் மோதுண்டுள்ளது.

இதன் காரணமாக தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மட்டுவில் மத்தியைச் சேர்ந்த சின்னத்துரை ஈஸ்வரன் (59) என்பவரே காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நாட்டின் நிதி நெருக்கடிக்கு நாடாளுமன்றமே பொறுப்பு

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டிய அவசியமில்லை. நாடாளுமன்றமே பொறுப்புக் கூற வேண்டுமென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று (30) தெரிவித்தார்.

பொதுமக்களின் நிதி தொடர்பில் முழுப் பொறுப்பையும் நாடாளுமன்றம் முறையாக நிறைவேற்றாததால் நாடு மேலும் நெருக்கடிக்குள்ளாவதாகவும் அவர் குறிப்பிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடுமையான இந்நிலையை சீராக்குவதற்காக 2003ஆம் ஆண்டு நிதி முகாமைத்துவ சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பிரதான காரணங்களின் அடிப்படையில் செயற்பட முடிந்தால் வரவுச் செலவுத்திட்ட வித்தியாசத்தை குறைத்துக்கொள்ள முடியும் என்றார்.

# புறக்கோட்டையில் தீப்பரவல்

புறக்கோட்டை பழைய மீன் சந்தை கட்டடதொகுதிக்கு அருகில் (தங்க ஆபரண விற்பனை கட்டடத் தொகுதி) கழிவுகள் குவிக்கப்பட்டிருந்த அறையொன்றில் நேற்று தீப்பரவல் ஏற்பட்டதாக புறக்கோட்டை பொலிஸ் நிலைய பெறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சமந்த சில்வா தெரிவித்தார்.

கொழும்பு தீயணைப்பு பிரிவுக்குரிய 3 வாகனங்கள் தீணயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் தீப் பரவல் முழுமையாக கட்டுப்பாடடுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரையில் கண்டறிப்படவில்லை என்பதுடன், எவ்வாறு தீப்பரவல் ஏற்பட்டது என்பது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வவுனியாவில் ஆசிரியர்களுக்கு சிலிண்டர்கள் விநியோகம்



(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கு நேற்று எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன.

எரிவாயு பெறுவதற்கு வரிசையில் நின்று ஆசிரியர்கள் சிரமப்படுவதாக பாடசாலை அதிபர் ஆ.லோகேஸ்வரனால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, லிட்ரோ நிறுவனத்தினால் சிலிண்டர்கள் வழங்கிவைக்கப்பட்டன.

# இலங்கைக்கு கடத்தவிருந்த களைநாசினிகள் தூத்துக்குடியில் மீட்பு

## ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியென பொலிஸார் தெரிவிப்பு

(மன்னார் நகர் செய்தியாளர்)

தமிழக தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரைப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான களைநாசினிகள் மீட்கப்பட்டுள்ளன. இவை தமிழகத்திலிருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்கு கடத்தவிருந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் திரேஸ்புரம் கடற்கரையில் ஒரு வள்ளத்தில் சரக்கு வாகனத்தில் இருந்து மூடைகளை ஏற்றிக் கொண்டு இருப்பதை கண்டு அவர்களை சுற்றி வளைக்க முற்பட்ட போது அவர்கள் தப்பிச் சென்று விட்டனர்.



அதனைத் தொடர்ந்து அங்கிருந்த வாகனத்தை சோதனை செய்தபோது அதில் இலங்கைக்கு கடத்தவிருந்த களைநாசினிகள் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பில் தமிழக பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


## வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | தயாரிப்பு வகை | |
|---|---|---|---|
| SP-LE - 6XXX | MAT4450517RR64613 | MOTOR LORRY | TATA ACE |
| WP-LG - 6XXX | LSCAD13Y08E015280 | MOTOR LORRY | CHANGAN SC1041D |

- வாகனம் பரிசோதனை செய்தல் : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2022 மார்ச் 31, ஏப்ரல் 01ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. ஏப்ரல் 02ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டென்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 2022 ஏப்ரல் 02ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டென்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டென்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- டென்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டென்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

டென்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டென்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனை" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டென்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.

முகாமையாளர்,
கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.
வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
தொலைபேசி இல. 0112 000 000

COMMERCIAL CREDIT

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மார்ச் 31ஆம் திகதி, வியாழக்கிழமை

# அரசின் உடனடி நடவடிக்கை தேவை!

இலங்கை மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டுள்ள நிலையில், அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான டொலர் பற்றாக்குறை காரணமாக இலங்கையின் அரசாங்க மருத்துவமனைகளில் உயிர் காக்கும் மருந்துகள் முடிவடையும் நிலை உருவாகியுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய மாகாணத்தில் கிட்டத்தட்ட 24 இலட்சம் பேருக்கு சேவை வழங்கும் பேராதனை போதனா வைத்தியசாலை, வழமையான சத்திரசிகிச்சைகளை இடைநிறுத்துவதாகவும், மயக்க மருந்துகள் சத்திரசிகிச்சைக்கான அத்தியாவசியப் பொருட்கள் இல்லை எனவும் அறிவித்தது.

இந்தப் பிரச்சினை பேராதனை மருத்துவமனைக்கு மாத்திரம் உரியதில்லை எனவும், அரச மருத்துவமனைகள் பலவற்றில் இந்த நிலை காணப்படுகின்றது எனவும் சுகாதார தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

மருந்துகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்போருக்கு ஆறு மாதமாக பணம் செலுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது.

அதே சமயம் பல முக்கிய மருந்துகளுக்கான பற்றாக்குறையை எதிர்கொள்வதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. மோசமடையும் நிலைமையை கையாள்வதற்கு பேரிடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் அவசியம் என மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொருட்களின் விலை அதிகரிப்பினால் பாதிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் இருதய நோயாளிகளுக்குப் பயன்படுத்தப்படும் ஸ்டென்ட் உட்பட மருத்துவ உபகரணங்களின் விலைகளை 30 வீதத்தினால் அதிகரிப்பதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு பிராந்திய மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காக விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் பேராதனை மருத்துவனையின் நிலைமையை அறிந்து கலக்கமடைந்துள்ளதாக தெரிவித்துள்ளதுடன், அவர்களுக்கு உதவுவதற்கான வழிமுறைகள் குறித்து ஆராயுமாறு இந்திய தூதரகத்தினை கேட்டுக்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

பேராதனை மருத்துவமனை மீண்டும் சத்திரகிசிச்சைகளை ஆரம்பிப்பதற்கு அவசியமான மருந்துகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், ஆய்வுகூட பரிசோதனைகளைக் கட்டுப்படுத்துமாறு கொழும்பு தேசிய வைத்தியசாலை நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி, வழமையான பரிசோதனைகளை மட்டுப்படுத்துமாறு வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் திணைக்களத் தலைவர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக, சோதனைக் கருவிகள் பற்றாக்குறையால் அத்தியாவசிய பரிசோதனைகளைத் தவிர, தினசரி வழக்கமான சோதனைகளைக் கட்டுப்படுத்த ஆய்வுகூடங் களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவமனைகளில் நெருக்கடி நிலைமை இருப்பது உண்மையான விடயம். நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் ஓரிடத்தில் நெருக்கடி நிலைமை இருப்பதாக எவரும் கூற விரும்பமாட்டார்கள். முன்னெச்சரிக்கையாக எதனையும் செய்யாதவிடத்து அழிவுகளை சந்திக்கலாம் என்று கருதி அந்த குறைபாடுகளை மருத்துவர்கள் கூற முனைவதில் தப்பில்லை.

ஆனால், பேராதனை மருத்துமனையின் நிலைமையினை கூறப்போன மருத்துவருக்கு ஒரு சில தரப்புகள் அரசியல் சாயம் பூசுகின்றன. ஒருவித பதற்ற நிலைமையைத் தோற்றுவிக்க அவர் முயல்வதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாரதூரமான ஒரு செய்தியை ஒருவர் கொண்டு வருவராயின் அந்த தகவலின் பாரதூரத்தை சீர்தூக்கிப் பார்ப்பதா?அல்லது அந்த தகவலைக் கொண்டுவந்தவரை ஏன் கொண்டுவந்தாயென கூறி கொலை செய்வதா?

நேற்றுக்காலை அரச ஊடகமொன்றுக்கு பேட்டியளித்த மருந்துப்பொருட்கள் உற்பத்தி இராஜாங்க அமைச்சர் சன்ன ஜெயசுமன, தேவையான அளவு மருந்துப்பொருட்கள் அரசிடம் இருப்பதாகவும், ஆனால், தவறான தகவல்களால் அரசுக்கு சர்வதேச அளவில் தர்மசங்கடம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறியதை கேட்க முடிந்தது.

பேராதனை வைத்தியசாலையின் மருந்துப் பிரச்சினைக்கு தீர்வைக்காண இந்திய வெளிநாட்டமைச்சர் மேற்கொண்ட தலையீட்டை அவமானமாக இலங்கை கருதுகின்றதுபோலும். இராஜாங்க அமைச்சர் ஜெயசுமனவின் கருத்தில் தொக்கி நிற்பது அதுதான். இன்னொரு நாட்டின் அமைச்சர் தலையிடுமளவுக்கு இங்கு நிலைமை இருக்கிறது என்பதற்காக ஆட்சியாளர்களே அவமானப்பட வேண்டும். அப்படியொரு நிலைமை வராமல் இருப்பதற்காக முன்கூட்டிய நடவடிக்கைகளை ஆட்சியாளர்களே எடுத்திருக்க வேண்டும்.

அதைவிடுத்து உண்மையான நிலைவரங்களை சொல்வோர் மீது அபாண்டங்களை சுமத்துவதும், மக்கள் உயிருக்கு போராடும்போது அரசியல் பேசிக்கொண்டிருப்பதும் வெறும் பத்தாம் பசலித்தனங்கள். நாளுக்கு நாள் நிலைமை மோசமாகி, படுக்கையிலிருக்கும் நோயாளிக்குக் கூட நிம்மதியில்லை என்ற நிலைமையே உருவாகியிருக்கிறது. அரசாங்க முகாமைத்துவம் சிக்கி சீரழிந்துகொண்டிருக்கிறது மக்களின் சாபங்களுடன்.

# உலகை மிரட்டும் பல் துலக்கிகள்!



காலை எழுந்தவுடன் அனிச்சைச் செயலைப் போலப் பற்பசையைப் பிதுக்கி துலக்கியைக் (பிரஷ்) கொண்டு பல் துலக்குகிறோம். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை புது பல் துலக்கியை மாற்றுவது ஆரோக்கியமானது என்று கூறப்படுகிறது.

சரி, நாம் உபயோகித்த அந்தப் பல் துலக்கி அதற்குப் பின்னர் என்னவாகிறது என என்றைக்காவது யோசித்திருப்போமா? கடந்த மாதம் உபயோகித்த பல் துலக்கி என்ன ஆனது என்பதையே அறியாத நமக்கு, உலகில் முதன்முதலில் தயாரிக்கப்பட்ட நெகிழி (பிளாஸ்ரிக்) பல் துலக்கியில் ஆரம்பித்து, இதுவரை நாம் பயன்படுத்திய அத்தனை பல் துலக்கிகளும் இன்னும் அழியாமல் இருக்கின்றன என்றால் நம்ப முடிகிறதா?

ஆம். தயாரிப்பதற்கு மிக எளிதாகவும், பயன்படுத்துவதற்குச் சுலபமாகவும் உள்ள 'ஹை டென்ஸிட்டி பொலி-எதிலீன்' நெகிழிப் பல் துலக்கிகளும், அவற்றின் நைலோன் நார்களும் பயன்படுத்தித் தூக்கியெறியப்பட்ட நாள் முதல் இன்றுவரை ஒன்றுகூட அழியாமல், இன்னும் அப்படியே இருக்கின்றன. மக்காத பல் துலக்கிகளாகவும், ஓரளவு சிதைத்த நெகிழியாகவும், நுண் நெகிழியாகவும்!

**பல் துலக்கி வரலாறு**

பல் துலக்கி உபயோகம் எப்படித் தொடங்கியது? கிறிஸ்து பிறப்பதற்கு 3,000 ஆண்டுகளுக்கு முன்னரே பாபிலோனியர்கள் ஒருவகை வாசனைக் குச்சிகளின் கூர்மையான முனையைக் கொண்டு பற்களில் சிக்கிய உணவை வெளியே எடுக்கவும், மறுமுனையைக் கடித்துப் பல் துலக்கவும் உபயோகித்ததாகக் குறிப்புகள் காணப்படுகின்றன. சீனாவில் டாங் வம்ச ஆட்சியின்போது பல் துலக்கி தற்போதைய வடிவத்தைப் பெற்றது. விலங்கு எலும்பு அல்லது மூங்கில் குச்சியில் ஓட்டைகளிட்டு சற்றுக் கடினமான காட்டுப்பன்றி முடிகளைச் சொருகி பல் துலக்கிகளாக அப்போது உபயோகித்துள்ளனர்.

17ஆம் நூற்றாண்டில் பயணிகள் மூலமாக சீனாவிலிருந்து ஐரோப்பா சென்ற பல் துலக்கிகள் அங்கே மெதுவாகப் புழக்கத்துக்கு வரத் தொடங்கின. 1780இல் வில்லியம் எடிஸ் எனும் இங்கிலாந்து சிறைக்கைதி, மாட்டு எலும்பில் துளையிட்டு, அதில் பன்றி முடிகளைப் பசையால் ஒட்டி துலக்கிகளைத் தயாரிக்க, அதைத் தொடர்ந்து 1844ஆம் ஆண்டு டொக்டர் மேயர் ரைன் என்பவர் மூன்று வரிசை கொண்ட துலக்கிகளைத் தயாரித்துள்ளார். இதற்குக் காப்புரிமை பெற்ற சில நிறுவனங்கள், 1885இல் பல் துலக்கிகளை அதிக அளவில் தயாரித்து சந்தைப்படுத்தும் வரைகூட பெரிய ஆபத்து இருக்கவில்லை. ஆனால், 1938ஆம் ஆண்டு நைலோன் முனைகளைக் கொண்ட நெகிழிப் பல் துலக்கி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே பிரச்சினைகளும் தொடங்கின.

**அழிவுக்கு இட்டுச் செல்லும்**

ஒரே ஒரு பல் துலக்கி என்ன மோசமான விளைவை ஏற்படுத்தி விடும் என்று நினைப்பவர்களுக்கு ஒரு சிறிய கணக்கு. ஓராண்டில் உலகம் முழுவதும் 800 கோடி மக்கள் உபயோகிக்கும் பல் துலக்கிகளின் எண்ணிக்கை 3,000 கோடிகளைத் தாண்டக்கூடும். ஒரு பல் துலக்கியின் சராசரி எடை 20 கிராம். இந்தக் கணக்கின்படி, வெறும் பல் துலக்கிகளால் மட்டும் உண்டாகும் நெகிழிக் கழிவின் எடை 60 கோடி கிலோ. இதே அளவில் உபயோகிக்கப்படும் பற்பசைக் குழல்களின் அளவையும் சேர்த்துக் கணக்கிட்டால், 120 கோடி கிலோ குப்பை. பல் துலக்குவதன் மூலம் மட்டும் இந்தப் பூமியில் ஒவ்வோர் ஆண்டும் இவ்வளவு கழிவு சேர்கிறது. இந்த அழிவற்ற நெகிழி ஒவ்வோர் ஆண்டும் இலட்சக் கணக்கான கடல்வாழ் உயிரினங்கள், பறவைகளின் அழிவுக்குக் காரணமாக இருக்கிறது. அது மட்டுமல்ல, இதுவரை நிலத்திலும், நீரிலும் அழியாமல் உலவிக் கொண்டிருக்கும் நெகிழிக் கழிவை நாமும் உட்கொண்டோ, பருகியோ வருகிறோம் என்கிற அச்சுறுத்தும் தகவலையும் கவனித்தாக வேண்டும்.

**பாதிப்புகள்**

இதுவரை நாம் உற்பத்தி செய்துள்ள கோடிக்கணக்கான கிலோ நெகிழியில் 11 சதவீதம் எரிக்கப்பட்டுள்ளது. 9 சதவீதம் மறுசுழற்சி செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 80 சதவீதம் இன்னமும் நிலத்தடியிலும், நீருக்குள்ளும் அழியாமல் உலவிக்கொண்டிருக்கிறது. இந்த மக்காத நெகிழி சூரிய ஒளி, காற்று, நீர் அல்லது வெப்பத்தில் 5 மி.மீ. அளவுக்கும் குறைவான நுண்நெகிழித் துகள்களாக மாறி உணவிலும், நீரிலும் கலந்து விட்டது. வெறும் கண்ணுக்குப் புலப்படாத இன்னும் சிறிய நுண்நெகிழித் துகள்கள், சுவாசிக்கும் காற்றிலும் கலந்துள்ளன. இந்த சிறிய துகள்கள் எளிதாகச் செயற்கை இரசாயனங்கள், உரங்கள், சேர்க்கைகளை ஈர்த்துக்கொண்டு, ஓர் உயிர் மென்படலமாக மாறிவிடுகின்றன. மனிதர்களின் நுரையீரல், குடல், எலும்புகள், நரம்புகள், இரத்த நாளங்கள் முக்கியமாக என்டோகிரைன் ஹோர்மோன்கள் ஆகியவற்றில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தி, குழந்தைப்பேறின்மை தொடங்கி புற்றுநோய் வரை பல்வேறு நோய்களுக்கும் காரணமாக மாறுகின்றன. அதேவேளை, இதுபோன்ற பாதிப்புகளால் பல்லாயிரக் கணக்கான கடல்வாழ் உயிரினங்கள் அழிந்தே விட்டன. நுண்நெகிழி சிறிய உயிரினங்களைக் கொன்றழித்து, பெரிய உயிரினங்களில் ஆரோக்கியக் குறைபாட்டை விளைவிக்கிறது.

**இயைந்து வாழ்வோம்**


புதிய நெகிழிப் பொருட்களை முற்றிலும் தடைசெய்வது, ஏற்கெனவே உள்ள நெகிழிக் கழிவை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவது மட்டுமே இதற்கான தீர்வு. இந்த வழிமுறைகளைப் பின்பற்றி 'ஸீரோ வேஸ்ட் ட்ரெய்ன் (Zero Waste Drain) எனப் பல நாடுகளும், பல்வேறு அமைப்புகளும் நெகிழியைப் புறக்கணித்து வருகின்றன.

அந்த வகையில் பல் துலக்கியில் நெகிழியைத் தவிர்த்து, நைலோன் வகை நார்களை ஆள்காட்டி விரலில் மாட்டிக்கொண்டு பல் துலக்கும் முறை பிரபலமாகிவருகிறது.

இயற்கையை மீறும் மனிதனை மீண்டும் இயற்கையுடன் இயைந்து வாழ அழைக்கின்றன இந்த முயற்சிகள். காலை எழுந்தவுடன் பல் துலக்கி, பற்பசை என்று நெகிழியைத் தொடாமல் மூங்கில் துலக்கி அல்லது வேப்பங்குச்சி/ ஆலங்குச்சிகளைப் பயன்படுத்தத் தொடங்கினால், 800 கோடி பேர் உபயோகிக்கும் 800 கோடி பல் துலக்கிகளையும், பற்பசை குழல்களால் உருவாகும் நெகிழிக் கழிவையும் குறைக்கலாம். பூமியையும் காக்கலாம்.

**டொக்டர் சசித்ரா தாமோதரன்,**
**மகப்பேறு மருத்துவர்.**

## தவக்கால சிந்தனை




தனது பணி இறைவனின் பணிதான் என்பதற்கான சான்றுகளாக இயேசு முன்வைப்பவற்றை இன்று வாசிக்கிறோம்.

'இவரே இறைவனின் செம்மறி' என்று அறிவித்தார். தந்தை ஒப்படைத்த செயல்கள் எளியோருக்கு நற்செய்தி, நோயுற்றோருக்கு நலம், சிறைப்பட்டோருக்கு உரிமை வாழ்வு என்பவை இறைவனால் அனுப்பப்பட்டவரின் செயல்கள். இயேசு அவற்றைச் செய்தார். ''இவர் அன்பார்ந்த மகன். இவருக்கு செவிசாயுங்கள்" என்ற தந்தையின் குரலை பலர் கேட்டிருந்தனர்.

இயேசுவின் வாழ்வில் நடந்த பலவும் மறைநூலில் முன்குறித்தபடியே நிகழ்ந்திருந்தன. யூத முறைப்படி ஒருவருக்கு இரண்டு சாட்சிகள் போதும். ஆனால், இயேசு தனது பணியின் உண்மைத்தன்மையை மெய்ப்பிக்க மறுக்க இயலாத வகையில் நான்கு சான்றுகளை வழங்குகிறார். நாம் இறைவனின் விருப்பப்படியே வாழ்கிறோம் என்பதற்கு என்ன சான்றுகள் இருக்கின்றன என்று இத்தவக்காலத்தில் ஆய்வு செய்வோம்.

செபம்

நிறைவின் நாயகனாம் இயேசுவே, உம்மைப் போற்றுகிறோம். மறைநூலின்படியும், இறைத்தந்தையின் விருப்பப்படியும் நீர் வாழ்ந்தீர். பணி செய்தீர். உம்மைப் போல் நாங்களும் இறைவார்த்தையின்படி வாழ, சாட்சிகளாய் மாற அருள்தாரும்.

## நக்கல் நமசிவாயம்

**போற போக்கை பார்க்கேக்க இனி கரண்ட் கொடுக்கிற நேரத்த மட்டும்தான் அறிவிப்பாங்கள் போல..!**




## இன்றைய நாளில்...

- 1885 – இலங்கையில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய வருடப் பிறப்பு நாட்கள் விடுமுறைகளாக அறிவிக்கப்பட்டன.
- 1889 – ஈபெல் கோபுரத்தின் தொடக்க விழா கொண்டாடப்பட்டது.
- 1930 – திரைப்படங்களில் பாலியல், குற்றங்கள், சமயம், வன்முறை நிகழ்வுகளைக் காண்பிப்பதற்கான குறியீடுகள் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டன.
- 1959 – திபெத்தின் 14ஆவது தலாய் லாமா, டென்சின் கியாட்சோ, எல்லையைக் கடந்து இந்தியாவினுள் நுழைந்து அரசியல் புகலிட உரிமை கோரினார்.
- 1966 – சோவியத்தின் லூனா-10 விண்கலம் சந்திரனை நோக்கி ஏவப்பட்டது. இதுவே சந்திரனின் சுற்றுவட்டத்தை வலம் வந்த முதலாவது விண்கலமாகும்.
- 1970 – 12 ஆண்டுகள் விண்வெளியில் கழித்த எக்ஸ்புளோரர்-1 விண்கலம் புவியின் வளிமண்டலத்துள் வந்தது.
- 1990 – இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து முற்றாக விலக்கப்பட்டது.

# வாகனங்கள் தீப்பிடிக்கக் காரணம் என்ன?

# எரிபொருளின் தரம் தொடர்பில் சந்தேகம்

## • ஒரு லீற்றருக்கான பயண தூரத்திலும் மாற்றம்
## • முச்சக்கரவண்டிகளை செலுத்துவதில் அச்சமென சாரதிகள் தெரிவிப்பு


பாணந்துறை


வாதுவ


அநுராதபுரம்


பண்டாரகமை


தெமட்டகொடை

(நமது விசேட செய்தியாளர்)

நாட்டின் சில பகுதிகளில் அடுத்தடுத்து வாகனங்கள் தீப்பிடிக்கின்றமைக்கான காரணம் எரிபொருளின் தரமின்மையாகுமென சாரதிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அத்துடன் தாம் முன்னர் பெற்றுக்கொண்ட எரிபொருளில் பயணிக்கக்கூடிய தூரத்தை விட தற்போது பெற்றுக்கொள்ளும் எரிபொருளில் பயணிக்கும் தூரம் குறைவெனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வாதுவ மஹவிஹார வீதிக்கு திரும்பும் வழியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று நேற்றுமுன்தினம் (29) திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் அதனை நிறுத்திவிட்டு அருகிலுள்ள வர்த்தக நிலையத்துக்குச் சென்றிருந்தவேளை அது தீப்பற்றியுள்ளது.

மேலும், கடந்த 28ஆம் திகதி இவ்வாறான மூன்று தீப்பற்றல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பண்டாரகம நகரத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக வந்தவேளை, முச்சக்கரவண்டியொன்று திடீரென தீப்பற்றியது. பாணந்துறை நகரிலுள்ள பாடசாலையொன்றுக்கு முன்பாக அன்றைய தினமே முச்சக்கரவண்டியொன்று தீப்பற்றியது. அநுராதபுரம் வைத்தியசாலைக்கு நோயாளியொருவரை ஏற்றிவந்த நிலையில் மற்றுமொரு முச்சக்கரவண்டி மருத்துவமனைக்கு முன்பாக தீப்பற்றியது.

இதேவேளை, தெமட்டகொடையில் கடந்த 26ஆம் திகதி காரொன்று தீப்பற்றியது. இதன் காரணமாக அப்பகுதியில் பல மணிநேரமாக வாகன நெரிசல் காணப்பட்டது.

இதன் காரணமாக எரிபொருளின் தரம் குறித்து தமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக முச்சக்கரவண்டியின் சாரதிகள் தெரிவித்துள்ளனர். கடன் அடிப்படையில் தாம் வாங்கும் வாகனங்கள் இவ்வாறு தீப்பற்றுவதால் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுப்பதாக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு வாகனங்கள் தீப்பற்றினால் அரசாங்கம் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# டீசல் தரம் குறைவு

## பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை சங்கம் குற்றச்சாட்டு

(நமது விசேட செய்தியாளர்)

எரிபொருள் நிலையங்களில் தற்போது வழங்கப்படும் டீசல் தரக்குறைவானதென பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது. அச்சங்கத்தின் தலைவர் என்.எம்.கே. ஹரிஸ்சந்திர பத்மசிறி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

எரிபொருள் நிரப்பிய பின்னர் ஆரம்பத்தில் ஒரு லீற்றரில் எட்டு கிலோ மீற்றர் பயணிக்க முடிந்தது. எனினும், தற்போது ஒரு லீற்றரில் நான்கு கிலோ மீற்றர் மாத்திரமே பயணிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



நாட்டில் எரிபொருள் பிரச்சினை இன்னும் ஓரிரு நாட்களில் முடிவுக்கு வந்துவிடும். எரிபொருள் விநியோகம் தொடர்பில் பொதுமக்கள் ஏதேனும் சிக்கல்களை எதிர்நோக்கினால் 0777 414241 என்ற எனது தொலைபேசி இலக்கத்துக்கு நேரடியாக தொடர்புகொள்ளலாம்.

- வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே



நாடு எதிர்நோக்கியிருக்கின்ற நெருக்கடியான நிலைமையின்போது பதவி விலகுவதில் அர்த்தமில்லை. மக்கள் பொருட்களுக்காக வரிசைகளில் காத்திருப்பதை பார்க்கும்போது கவலையாக இருக்கிறது.

- அமைச்சர் சமல் ராஜபக்ஷ

# இந்திய வெளிவிவகார அமைச்சருடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சந்திப்பு

## அந்நாட்டின் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்



இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்ஷங்கர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் (29) பிற்பகல் இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இந்நெருக்கடியான தருணத்தில் இந்தியா தனது சகோதரத்துவக் கரத்தை இலங்கைக்கு நீட்டியதற்கு நன்றி தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதுவரை இலங்கைக்கு இந்தியா வழங்கிய ஆதரவிற்கும் நன்றி தெரிவித்தார். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்டகால இரு தரப்பு உறவு மற்றும் அது எந்தளவிற்கு பொருளாதார, கலாசார மற்றும் சமூக ரீதியில் பரவியுள்ளது என்பதையும் எதிர்க்கட்சித் தலைவர் நினைவு கூர்ந்தார்.

இலங்கை மீண்டெழுவதற்கு முழுமையான ஆதரவையும் உதவியையும் வழங்குமாறு தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இவ்வாறான உதவிகளை மக்கள் மிகவும் பயனுள்ளதாகப் பயன்படுத்துவதற்கான திட்டத்திற்கு தேவையான ஆதரவை வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரத்ன, வடிவேல் சுரேஷ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 30.03.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 105 417 | 115 3246 |
| கனேடியன் டொலர் | 12 8430 | 130 0175 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 34 1547 | 36 2666 |
| யூரோ | 212 6087 | 224 302 |
| ஜப்பான் யென் | 1 2548 | 1 3558 |
| சிங்கப்பூர் டொலர் | 102 7530 | 111 321 |
| ஸ்ரேலிங் பவுன் | 267 7712 | 282 1563 |
| சுவிஸ் பிராங் | 20 776 | 212 6722 |
| ஐ.அ.டொலர் | 177 6364 | 187 8847 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 700 7 58 |
| குவைட் | குவைட் தினார் | 0, 5 0677 |
| ஓமான் | ஓமான் றியால் | 684 05 |
| கட்டார் | கட்டார் றியால் | 72 8775 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 70 4536 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 72 2201 |

# எரிபொருள், எரிவாயுவுக்கு மாத்தளையிலும் வரிசை



(மாத்தளை செய்தியாளர்)

நாட்டில் நிலவிவரும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு மற்றும் வாகனங்களுக்கான எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாத்தளை மாநகரம் உட்பட சூழவுள்ள உப நகரங்களில் சமையல் எரிவாயு மற்றும் வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகிக்கும் நிலையங்களில் மக்கள் காலை தொடக்கம் இரவு வரை வரிசையாக காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு காத்திருக்கும் மக்களுக்கு தேவையான சமையல் எரிவாயு மற்றும் வாகனங்களுக்கான எரிவாயு வழங்கப்படாமையினால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

# பாக்கு மரத்திலிருந்து வீழ்ந்து குடும்பஸ்தர் பலி

(கெலும் குணதிலக்க)

பாக்கு பறித்துக்கொண்டிருந்தவேளை அதிலிருந்து விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் பலியான சம்பவம் மெதகமவில் நேற்றுமுன்தினம் (29) பதிவாகியுள்ளது. மெதகம, மீகஹவகுரவைச் சேர்ந்த டபிள்யூ. எம். குணசேகர என்ற 45 வயதான குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மரத்திலிருந்து விழுந்த அவர் கடுமையான காயங்களுக்குள்ளாகி மெதகம பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மெதகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரபாத் திசாநாயக்க தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.






# எரிபொருளை வழங்கத் தவறியதால்

# ஹட்டன் நகரின் பிரதான பாதைகளை மறித்து சாரதிகளும் பொதுமக்களும் போராட்டம்!



(க.கிஷாந்தன்)

ஹட்டன் நகரிலுள்ள பிரதான பாதைகளை மறித்து சாரதிகளும், ஓட்டோ ஓட்டுநர்களும், பொதுமக்களும் நேற்று (30) போராட்டத்தில் ஈடுபட்டதால் பெரும் பதற்றம் ஏற்பட்டுளளது. அத்துடன், ஹட்டன் நகரம் பகுதியளவு ஸ்தம்பிதமடைந்துள்ளது.

ஹட்டன் நகரிலுள்ள எரிபொருள் நிலையத்தில் டீசலை பெற்றுக்கொள்வதற்கு நேற்றுமுன்தினம் (29) மாலைமுதல் சாரதிகள் காத்திருந்தனர். எனினும், இறுதிநேரத்தில் டீசல் இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடுப்பாகிய சாரதிகள் பொது மக்களுடன் இணைந்து ஹட்டன் மணிக்கூட்டு கோபுரம் சந்தியில் நேற்று (29) இரவு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பொலிஸாரின் தலையீட்டுடன் போராட்டம் நிறுத்தப்பட்டது.

இதனையடுத்து, நேற்று (30) காலை 9 மணிக்கு டீசல் விநியோகிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. எனினும், அந்த உறுதி மீறப்பட்டதால் சாரதிகள் வீதிக்கு இறங்கி போராடி வருகின்றனர்.

அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி வருவதுடன், இந்த அரசு வீடு செல்லவேண்டும் எனவும் கோஷம் எழுப்பினர்.

# தமிழ், சிங்களப் புத்தாண்டினை முன்னிட்டு பெருந்தோட்ட மக்களுக்கு 10 ஆயிரம் ரூபா

## மானியமாக வழங்க நிதி அமைச்சர் உறுதியென அரவிந்தகுமார் எம்.பி. தெரிவிப்பு

(எம். செல்வராஜா)

தமிழ், சிங்களப் புத்தாண்டினை முன்னிலைப் படுத்தி, குறைந்த வருமானங்களைக்கொண்ட பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பத்தாயிரம் ரூபா என்ற அடிப்படையில், மொத்தமாகவோ அல்லது இரு முறைகளாகவோ வழங்கப்படுமென நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்தாக பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார், நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவை நேற்று (30) நேரடியாகச் சந்தித்து, நிவாரண நிதி வழங்குவது குறித்து விளக்கம் கேட்ட வேளையிலேயே நிதியமைச்சர் மேற்கண்ட விளக்கத்தை வழங்கியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த முறைகளில் நிவாரண நிதிகள் வழங்குவதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது. ஆகையினால், தமிழ், சிங்களப் புத்தாண்டினை முன்னிட்டு வழங்கப்படவுள்ள நிவாரணம் குறித்து, நிதியமைச்சரிடம் வினவினேன். அப்பொழுது, அவர் புத்தாண்டினை முன்னிட்டு சகலருக்கும் பத்தாயிரம் ரூபா என்ற அடிப்படையில் மொத்தமாகவோ அல்லது இரு முறைகளாகவோ வழங்கப்படும். குறைந்த வருமானம் கொண்ட தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும், இந்நிவாரண நிதி கிரமமாக வழங்கப்படும். நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி நிலையினால், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், பொருட்கள் தட்டுப்பாடு, எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு ஆகியவற்றினால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனை கருத்திற்கொண்டே, குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு பத்தாயிரம் ரூபா நிவாரணம் வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது என்றும் கூறினார்.

ஆகவே, நாட்டின் இன்றைய நெருக்கடி நிலையில் அரசு மக்களுக்கு நிவாரண நிதியினை வழங்குவது பராட்டத்தக்கதும், வரவேற்கக்கூடியதாகும். நாட்டு மக்கள் மற்றும் இந்நாட்டின் மீது இவ்வரசு வைத்திருக்கும் அபார நம்பிக்கையும், மக்கள் மீது வைத்திருக்கும் பாசமுமே இதற்குக் காரணமாகும் - என்றார்.

# பாமஸ்டன் தமிழ் வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் இருவர் சித்தி





தலவாக்கலை நிருபர்

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட பாமஸ்டன் தமிழ் வித்தியாலய பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

அந்தவகையில் வை.லெனின் 167 புள்ளிகள், பி.சலத் ஏஞ்சனா 146 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் எஸ்.என்டனி ராஜ்குமாருக்கும் 100இற்கு அதிகமாக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கும் அதிபர் ஆர்.பெரியநாயகம் தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.





சரித்திர புகழ்பெற்ற நுவரெலியா சீத்தாஎலியா சீதையம்மன் ஆலயத்தில் இந்தியா டில்லி சிடி ரோட்டரிக் கழகத்தின் உறுப்பினர்களான ரோட்டேரியன் பிரதீப் ஜெயின், ரோட்டேரியன் அலோக்ஜெயின் மற்றும் ரோட்டேரியன் சென்டீப் வைஸ் ஆகிய மூவர் கொண்ட குழுவினரின் அனுசரணையுடனும் நுவரெலியா ரோட்டரிக் கழகத்தின் ஆதரவுடன் 30 இலட்சம் ரூபா செலவில் புதிய அபிவிருத்த் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுமுன்தினம் (29) இடம்பெற்றது. **(படங்கள் : தலவாக்கலை நிருபர்)**

# தேயிலைக் கன்றுகள பயிரிடும் திட்டம் அங்குரார்ப்பணம்



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை மஹவலதென்னையில் 100 தேயிலைக் கன்றுகள் பயிரிடும் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இங்கு தெரிவுசெய்யப்பட்ட பல தேயிலைக் கன்றுகள் பயிரிடும் குடும்பங்களுக்கு அவசியமான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அகிலா எல்லாவல தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

# புலமைப்பரிசில் பரீட்சையில் 6 மாணவர்கள் சித்தி; பெயலோன் தமிழ் வித்தியாலயம் சாதனை



(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் கல்வி வலய கோட்டம் மூன்று சாமிமலை என்ற பின்தங்கிய பகுதியிலுள்ள பெயலோன் தமிழ் வித்தியாலய அதிபரின் வழிகாட்டலில் 96 வருடங்களுக்குப் பின்னர் சாதனை படைத்துள்ளது.

இப்பாடசாலையில் நடந்து முடிந்த தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 41 மாணவ மாணவிகள் பங்கேற்று அதில் 6 மாணவிகள் சித்தி பெற்றனர். ஏனையவர்கள் 70இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற் றுள்ளனர்.

து.கிருஸ்ணிகா 162 புள்ளி, து.பவித்திரா 161 புள்ளி, வு.டிலஜானி 160 புள்ளி, டீ.கிருஷாந்தினி 154 புள்ளி, ஆ.தினேஷ்கா 151 புள்ளி, ஏ.து.தில்ருக்ஷி 150 புள்ளிகள் பெற்று சாதனை படைத்துள்ளனர். இவர்களுக்கு கற்பித்த அனைத்து ஆசிரியர் களுக்கும் பெற்றோர் நன்றி தெரிவித்தனர்.

# மஞ்சள் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு; நியாய விலையில் வழங்கவும் விசேட நடவடிக்கை

## அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவிப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

கொரோனா நெருக்கடிக் காலத்தில் நாட்டின் தேவைக்காக மஞ்சள் இறக்குமதி செய்யப்பட்ட போதிலும் தற்போது உணவு மற்றும் தேவைகளை பூர்த்திசெய்யும் அளவுக்கு மஞ்சள் உற்பத்தியில் நாம் தன்னிறைவை அடைந்துள்ளோம் - என ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜானக வக்கும்புர தெரிவித்தார்

எம்பிலிப்பிட்டியவில் பல அபிவிருத்தி செயற்பாடுகளில் கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்:

நாட்டில் மஞ்சளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டபோது அதனை இறக்குமதி செய்தோம். கடந்த ஆண்டில் மட்டும் 6 ஆயிரம் மெட்ரிக் தொன் மஞ்சளை இறக்குமதி செய்தோம். அதனால் அந்நியச் செலாவணி நாட்டுக்கு வெளியில் சென்றது.

ஆனால், நாம் தற்போது மஞ்சள் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துவிட்டோம். இதனால் தனியார் வியாபாரிகள் விவசாயிகளின் மஞ்சள் உற்பத்திகளை குறைந்த விலையில் சூறையாட முயற்சிக்கின்றனர். இதனால் மஞ்சள் உற்பத்தியாளர்களை பதிவு செய்யும் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இவர்களது உற்பத்திகளுக்கு நியாயமான விலையை வழங்கி விவசாயிகளுக்கு சுபீட்சமான வாழ்க்கையை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.



பண்டாரவளை கல்வி வலயத்திற்குட்பட்ட ஹல்தமுல்ல நீட்வுட் இலக்கம் ஒன்று, தமிழ் வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவன் சுந்தரராஜ் விராஜ் 147 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார். (படம் : நடராஜா மலர்வேந்தன்)

# தமிழக மீனவர்களுடன் இனி எந்தவொரு பேச்சிலும் கலந்துகொள்ளப் போவதில்லை

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பேச்சாளர் ஆலம்

(மன்னார் நகர் நிருபர்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக எங்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயல்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளதோடு, எமது முயற்சிகள் வெற்றியளிக்கப்படாமல் இருக்கின்றன - என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பேச்சாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று புதன்கிழமை (30) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக எங்களால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செயல்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளதோடு, வெற்றியளிக்கப்படாமல் இருக்கின்றது.

நாங்கள் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியபோதும் இன்னும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறைவடையவில்லை.

புதிதாக உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் ஊடாக இதற்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்று நம்பியிருந்தபோதும் உரிய கடற்றொழில் அமைச்சரினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இரண்டு வருடங்கள் கடந்தும் அதற்கான எந்தவொரு தீர்வும் கிடைக்கவில்லை.

அண்மையில் கச்சதீவில் இந்திய மீனவர்களுடன் ஒரு கலந்துரையாடலை நடத்தியிருக்கிறார்கள். அந்தக் கலந்துரையாடலில் உரிய விடயங்கள் எதுவும் பேசப்படவில்லை. ஆனால், இந்திய தரப்பால் இலங்கை மீனவர்களுடன் பேசுவோம். பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வோம் என்று அவர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

வட பகுதி மீனவர்கள் என்ற வகையில் இந்திய தமிழக மீனவர்களுடன் எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் கலந்துகொள்ளப்போவதில்லை என்ற செய்தியை நாம் பதிவுசெய்துகொள்ள விரும்புகிறோம்.




மேலும், எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பாக நீண்ட வரிசையில் நின்று எரிபொருட்களை மீனவர்களும் பொதுமக்களும் பெற்றுக்கொண்டு வருகிறார்கள்.

இந்த நெருக்கடி நிலை ஏன் ஏற்பட்டது என்று எங்களுக்கு விளங்கவில்லை. குறிப்பாக, வட பகுதிக்கு வருகின்ற எரிபொருட்களை சமமாக பங்கிட்டு ஒரு படகுக்கு இவ்வளவுதான் என்று முறையாக செயல்படும்போது இந்தப் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியும்.

இது தொடர்பாக நாங்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (29) மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது மாவட்ட செயலாளரிடம் தெரிவித்திருந்தோம்.

மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் 33 சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அதில் கண்ணாடி இழை படகுகள் 3,500 இருக்கின்றன. ஒரு படகுக்கு கிட்டத்தட்ட 30 லீற்றர் எரிபொருள் தேவை என்று பார்த்தாலும் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லீற்றர் எரிபொருள் தேவைப்படுகிறது.

எனவே, வருகின்ற எரிபொருட்களை சமமாக பங்கிட்டு வழங்கியிருந்தால் மீனவர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் வரிசையில் நிற்கவேண்டிய தேவை இருக்காது.

மீனவர்களுக்கான எரிபொருட்களை மீன்பிடி சங்கங்களுக்கு வழங்கி அந்த சங்கங்களின் ஊடாக அங்கத்தவர்களுக்கு வழங்குவது இலகுவாக இருக்கும். எரிபொருள் தட்டுப்பாடு நிலவிய காலங்களில் நாங்கள் இதையே மேற்கொண்டோம்.

பொதுமக்கள் தங்களுக்கு தேவையான எரிபொருளை எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் ஊடாக பூர்த்திசெய்துகொள்வார்கள். குறித்த விடயம் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபருக்கும் மாவட்ட கடற்றொழில் உதவி ஆணையாளர் போன்றவர்களுக்கும் தெளிவுபடுத்தி இருக்கின்றோம்.

எனவே, மாவட்டத்தில் இயங்கும் எரிபொருள் வழங்கும் நிலையங்கள் மீனவர்களுக்கான எரிபொருட்களை மீனவ சங்கங்களுக்கு பகிர்ந்தளித்து மீனவர்களின் தொழிலுக்கு இடையூறு இல்லாமல் செயல்படுத்த வேண்டும் – என்றார்.

# யாழில் இடம்பெற்ற தேசிய வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை - 2022 அங்குரார்ப்பண நிகழ்வுகள்







(சாவகச்சேரி நிருபர்)

"நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத் திட்டத்துக்கமைய, "பசுமையான தேசம்" தேசிய வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை - 2022, வடக்கு நோக்கி செடி நாட்டுதல் திட்டத்தின் யாழ். மாவட்ட அங்குரார்ப்பண நிகழ்வுகள் நேற்று முன்தினம் (29.03.2022) காலை 9.18 மணிக்கு யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி அலுவலகத்தில் இடம்பெற்றன.

கொவிட் பெருந்தொற்று எல்லா நாடுகளிலும் சமூக, பொருளாதாரத் துறைகளில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்திய நிலையிலும், இந்த நெருக்கடியிலிருந்து உருவான சவால்களை எதிர்கொள்வதற்காகவும், பசுமைச் சமூகப் பொருளாதாரத்தைக் கொண்டுள்ள நாடாக இலங்கையை மாற்றுவதற்காகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத்திட்டத்திற்கமைய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிநடத்தலிலும், நிதி அமைச்சரும் ஜனாதிபதி செயலணியின் தலைவருமான பெசில் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைவாகவும், நீர்ப்பாசன அமைச்சரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சரும், வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை வேலைத்திட்ட மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக்கான தேசிய குழுவின் தவிசாளருமான சமல் ராஜபக்ஷவின் வழிநடத்தலிலும், உள்நாட்டில் உற்பத்தி செய்யத்தக்க உணவுப் பயிர்களைக் கிடைக்கச்செய்து, இறக்குமதிக்கான மாற்றீடுகளின் உள்ளூர் உணவு உற்பத்தியினை அதிகரிப்பதற்கு முதலிடம் வழங்கப்பட்டு தேசிய வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைப் புரட்சியினை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தி ஆர்வமூட்டி, நேரடியாக பங்கேற்க நடவடிக்கை எடுக்கும் வகையில், 'பசுமையான தேசம்' தேசிய வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை - 2022 திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மேலும், வீடுகளைச் சுற்றி சுத்தமான சூழல் காணப்படும் நிலையில், நாளாந்த நுகர்வுக்கு தேவைப்படும் நச்சுத்தன்மையற்ற புதிய மரக்கறிகள், கீரைகள் மற்றும் கிழங்கு வகைகள், பழங்கள், பால், முட்டை போன்ற போசணை மிக்க உணவுகளை வீடுகளிலேயே பரஸ்பர குடும்ப அங்கத்தவர்களின் உதவிகளினூடாக அடைந்து உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியமுள்ள தன்னிறைவு பெற்ற குடும்ப அலகுகளாலான மக்கள் தொகையை உருவாக்குவதே இந்த "பசுமையான தேசம்" தேசிய வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இதன்படி, அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் சமுர்த்தி நாற்று மேடைகளினால் உருவாக்கப்பட்ட மரக்கறிச் செடிகள் (ஒரு வீட்டிற்கு 40 செடிகள் என்ற வகையில்) அந்தப் பிரிவின் பயனாளிகளுக்கு இயலுமானளவு பகிர்ந்தளிப்பதற்கும், வீட்டுத் தோட்டம் தொடர்பாக ஏனைய அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற உள்ளீடுகள் (தென்னங்கன்று, மருத்துவ மூலிகைச் செடிகள், பழக்கன்றுகள், சிறு ஏற்றுமதி போகச் செடிகள் ஆகியன) கிடைக்கின்ற ஒழுங்குமுறைகளுக்கமைய பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

இந்த ஆரம்ப நிகழ்வில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சா. சுதர்சன், சமுர்த்தி வங்கி முகாமையாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## திடீர் சுகவீனம் காரணமாக இளம் பெண் உயிரிழப்பு!

(யாழ். நிருபர்)

திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக இளம் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். அவரது உயிரிழப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், அவரது உடல்கூற்று மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கீரிமலை கூவில் பகுதியைச் சேர்ந்தவரும், கெப்பற்றிக்கொலாவை குடும்பநல உத்தியோகத்தருமான கந்தசாமி நிதர்சினி (வயது 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கெப்பற்றிக்கொலாவையில் பணியாற்றி வந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் திடீர் சுகவீனம் காரணமாக கீரிமலையில் உள்ள தனது வீட்டுக்கு திரும்பியுள்ளார்.

இந்நிலையில் கடந்த 26ஆம் திகதி உடல் நிலை மோசமானதையடுத்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

மறுநாள் 27ஆம் திகதி அவர் மயக்க நிலைக்கு சென்றதையடுத்து, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது மரணத்திற்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் உடல் கூற்று மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## உரும்பிராயில் பொலிஸார் மீது தாக்குதல்: இரு பெண்கள் உள்ளிட்ட ஐவர் கைது

(யாழ். நிருபர்)

நீதிமன்ற பிடிவிறாந்தை நடைமுறைப்படுத்தச் சென்ற இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றத்தில் 2 பெண்கள் உள்ளிட்ட 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யோகபுரம் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு செல்லாததால் நீதிமன்றினால் அவர்களுக்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட பிடிவிறாந்தினை நடைமுறைப்படுத்தி அவர்களை கைதுசெய்வதற்காக இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யோகபுரம் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

இதன்போது அங்கு நின்றவர்கள் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்ததுடன், பொலிஸார் மீது தாக்குதலையும் மேற்கொண்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக நடவடிக்கையை முன்னெடுத்த பொலிஸார், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, தாக்குதல் மேற்கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இரு பெண்கள் உள்ளிட்ட ஐவரை கைது செய்துள்ளனர்.

## மன்னாரில் 'ஹரித தெயக்' தேசிய வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைத் திட்டம்









(மன்னார் நகர் நிருபர்)

முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் 22 இலட்சம் வீட்டுத் தோட்டங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்படும் 'ஹரித தெயக்' தேசிய வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கைத் திட்டம் மன்னார் மாவட்டத்திலும் நேற்று முன்தினம் (29) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெரிய நீலசேனை கிராமத்தில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், மாவட்ட செயலகம் மற்றும் மன்னார் பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் உட்பட விவசாயத் திணைக்கள அதிகாரிகள், சமுர்த்தி திணைக்கள அதிகாரிகள், அழைக்கப்பட்ட திணைக்களப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு நாற்றுகள் மற்றும் விதைகள் வழங்கப்பட்டன.

மேலும் குறித்த கிராமத்திலுள்ள வீடுகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வீட்டுத் தோட்டச் செய்கையையும் அதிகாரிகள் பார்வையிட்டதோடு, குறித்த செய்கையை ஊக்குவிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பயனாளர்களுடன் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீட்டில் கஞ்சா செடி வளர்த்தவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது

(யாழ். நிருபர்)

வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியவர் வீட்டில் கஞ்சா செடி வளர்த்த குற்றத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவிலிருந்து நாடு திரும்பி, யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் வசித்துவந்த நபரே கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தனது வீட்டில் பூச்சாடியில் கஞ்சா செடி வளர்ப்பதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த நபரின் வீட்டினை நேற்று முன்தினம் சுற்றிவளைத்த பொலிஸார், அவரை கைதுசெய்ததுடன், வீட்டில் வளர்த்த கஞ்சா செடியினை சான்றுபொருளாக மீட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அராலியில் வீடுடைத்து திருட்டு!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் அராலி பகுதியில் வீடு ஒன்றினை உடைத்து பெறுமதியான கையடக்கத் தொலைபேசி மற்றும் பணம் என்பவை திருடப்பட்டுள்ளன.

அராலி வடக்கு, செட்டியார் மடம் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்தவர்கள் வெளியில் சென்றிருந்த சமயம், வீட்டின் கதவினை உடைத்து உட்புகுந்த திருடர்கள், வீட்டில் இருந்த பணம் மற்றும் பெறுமதிவாய்ந்த கையடக்கத் தொலைபேசி உள்ளிட்டவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## நாவற்குழியில் வீடுடைத்து திருடிய இருவர் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியில் வீடு உடைத்து திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாவற்குழி பகுதியில் வசிக்கும் அரச உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டை பட்டப்பகலில் உடைத்து 7 பவுண் நகையை திருடிச் சென்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு, யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், நேற்று முன்தினம் (29) வீடுடைத்து திருடிய குற்றத்தில் இருவரை கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் திருடப்பட்ட நகையையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திகதி 29.03.2022
செவ்வாய்க்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4721
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 14,429,780.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 0 3 0 5 5 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 17,662,152.00
Mega POWER மெகா பவர்
கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1069
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,989,460.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 244,555,502.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Z சுப்பர் இலக்கம் 23 வெற்றி இலக்கங்கள் 02 18 27 38
தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 751
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,737,320.00
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 06 20 60 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 105,243,476.80
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

## ஆலயங்களில் உண்டியல் பணம் திருடியவர் கைது

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலுள்ள பிரபல இரண்டு ஆலயங்களில் கடந்த திங்கட்கிழமை இரவு உண்டியல் உடைத்து பணம் திருடியவர் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த திருட்டுச் சம்பவங்கள் நேற்றிரவு இடம்பெற்ற நிலையில், சந்தேக நபர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவரே யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

ஆலயம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கெமரா பதிவை வைத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.



# தேசியப் பிரச்சினைக்கு தீர்வுக் கிடைக்கும்வரை புலம்பெயர் மக்கள் முதலீடுசெய்யப் போவதில்லை!

## தடைவிதித்துவிட்டு அவர்களை வருமாறு அழைப்பதில் அர்த்தமில்லை என சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(ந.குகதர்சன்)

நாட்டில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கின்ற ஒரு தீர்வு வரும்வரைக்கும் புலம்பெயர்ந்த மக்கள் இங்கு முதலீட்டுக்கு வரமாட்டார்கள். புலம்பெயர் அமைப்புகளையும், தனியார்களையும் தடை செய்துவிட்டு அவர்களை வருமாறு அரசாங்கம் அழைப்பதில் அர்த்தமில்லை. ஆகையால், அவர்கள் வருவார்கள் என்று திடீரென பகல் கனவு காணவேண்டிய அவசியம் கிடையாது - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (29) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த சில நாட்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சில முக்கிய சந்திப்புகளில் கலந்துகொண்டிருந்தோம். அத்துடன், பல இராஜதந்திரிகளின் விஜயங்கள் கூட இடம்பெற்றன. அந்தவகையில் மிக உயர்ந்த பதவிகளை வகிக்கும் அமெரிக்க இராஜதந்திரிகள் சிலர், விக்டோரியா நூலன் என்கின்ற துணை இராஜாங்க செயலாளர் உட்பட மூன்று இராஜதந்திரிகள் விஜயம் செய்து ஜனாதிபதி உள்ளிட்டோரைச் சந்தித்துச் சென்றிருக்கின்றார்கள்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்ஷங்கருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில், மிக முக்கியமாக கடந்த 25ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை சம்பந்தமாக பேசப்பட்டது. இது சம்பந்தமாக எங்களுக்கு முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்ததாகவும், நாங்கள் தெரிவித்த விடயத்தை ஜனாதிபதி ஏற்கனவே சொல்லியிருப்பதாகவும் உடனடி விடயங்கள் சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் இணக்கப்பாடு அல்லது வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று இந்தியாவிற்கு உறுதியளித்ததாகவும் எங்களுக்குத் தெரியப்படுத்தினார்.

அந்த உடனடி விடயங்களில் நீண்டகால தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பு சம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நில அபகரிப்பு தொடர்பில் நீண்ட பேச்சு வார்த்தை நடத்தினோம். வெவ்வேறு சட்டங்களின் அடிப்படையில் எமது நிலங்கள் அபகரிக்கப்படுவதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கைக்கு அவர்கள் இணங்கினார்கள். அதற்கப்பால் நிர்வாக எல்லைகளை மாற்றுகின்ற முயற்சி நடைபெறுகின்றது. இராணுவத் தேவைக்காக புதிய சுவீகரிப்புகள் செய்யப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கென்று ஒரு விசேட அபிவிருத்தி நிதியமொன்று உருவாக்குவதற்கு அரசாங்கம் இணங்கியிருக்கின்றது. இந்த நான்கு விடயங்கள் சம்பந்தமாக அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருக்கின்றது. அத்துடன் மேலும் முக்கிய விடயங்கள் குறித்தும் பேசி முடிவெடுக்க வேண்டும்.

நிர்வாக எல்லைகள் சம்பந்தமாகவும் நாங்கள் பேசியிருக்கின்றோம். அதில் கல்முனை வடக்கு சம்பந்தமான விடயம் உள்ளிட்டவையும் பேசப்பட்டன. அவை தொடர்பில் விவரமாகச் சொல்லப்படாவிட்டாலும் இனிவரும் நாட்களில் அமைச்சர் சமல் ராஜபக்ஷவுடன் பேசும்போது அந்த விடயத்தைப் பற்றியும் பேசுவோம். மகாவலி இடங்கள், மாவட்ட, பிரதேச செயலக எல்லைகள் மாற்றியமைக்கின்ற விடயங்கள் பற்றியும் இனிவரும் காலங்களில் பேசுவோம்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில்,

இந்தச் சந்திப்பு தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவிக்கும்போது இது நல்ல விடயங்கள். உடனடி விடயங்களுக்கான தீர்வை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சியை நாங்களும் எடுக்க வேண்டும் என்ற ஆலோசனை எங்களுக்கு வழங்கப்பட்டது. அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கை வெளிவந்தவுடன் அரசியல் தீர்வு விடயம் பற்றி பேசலாம் என்ற விடயமும் சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினை மக்கள் பிரச்சினை என்பதால், இனிவரும் நாட்களிலே தொடர்ச்சியாக நடைபெறுகின்ற சர்வகட்சி கூட்டங்களிலும் நாங்கள் பங்குபற்றுவோம்.

வடமாகாணத்திலுள்ள மூன்று தீவுகளை உற்பத்தி செயற்பாடொன்றுக்காக இந்தியாவிற்கு வழங்குவதை வரவேற்கின்றோம். நாங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம். இந்தியத் திட்டங்கள், இந்திய முதலீட்டுத் திட்டங்கள் வடக்கு கிழக்கில் வருவதை நாங்கள் முற்றுமுழுதாக வரவேற்கின்றோம். அது எங்களுக்குப் பலமாக இருக்கும்.

நான் சென்னைக்குச் சென்றபோது தமிழ்நாட்டின் நிதியமைச்சரோடு நீண்ட பேச்சுவார்தைகளை நடத்தியிருக்கின்றேன். அதன் தொடர்ச்சியாக பல முன்னெடுப்புகள் தற்போது நடைபெறுகின்றன. அதிலொன்று தமிழ்நாட்டிலிருந்து வரும் முதலீட்டாளர்கள் புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்களையும் இணைத்துக்கொண்டு வருகின்ற திட்டமும் இருக்கின்றது. அந்தப் பொறிமுறையொன்றை ஏற்படுத்த நாங்கள் முயல்கின்றோம். அதில் நேரடியாக இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்பாத இலங்கைத் தமிழ் புலம்பெயர்ந்த சமூகத்தினர் தமிழ்நாட்டு முதலீட்டாளர்களுடன் இணைந்து வர விரும்பினால் அதற்கான ஒரு வழியையும் நாங்கள் ஏற்படுத்துகின்றோம்.

ஆனால், இது எல்லாவற்றிற்கும் முன்னர் சர்வகட்சி மாநாட்டில் இந்த விடயம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது நான் சொன்ன ஒரே ஒரு விடயம் இந்த நாட்டில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கின்ற ஒரு தீர்வு வரும்வரைக்கும் புலம்பெயர்ந்த மக்கள் இங்கு முதலீட்டுக்கு வரமாட்டார்கள் என்பதை நான் சொல்லியிருந்தேன். புலம்பெயர்ந்த மக்கள் அமைப்புகளையும், தனியார்களையும் தடை செய்துவிட்டு அவர்களை வருமாறு அரசாங்கம் அழைப்பதில் அர்த்தமில்லை. ஆகையால் இந்த விடயங்கள் கவனத்திலெடுக்கப்பட வேண்டும். அவர்கள் வருவார்கள் என்று திடீரென பகல் கனவு காணவேண்டிய அவசியம் கிடையாது. அரசியல் தீர்வொன்று நாட்டுக்கு கொண்டுவரப்பட்டால் தான் அதைப்பற்றி நாங்கள் பேச முடியும் - என்றார்.

# போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட இருவர் கைது



(கனகராசா சரவணன்;)

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்திலிருந்து கருவப்பங்கேணி பிரதேசத்துக்கு முச்சக்கரவண்டியில் கேரள கஞ்சாவை கடத்திச்சென்று, விற்பனையில் ஈடுபட்ட கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் 90 கிராம் கேரள கஞ்சாவுடன் கைதுசெய்துள்ளதாக நேற்று முன்தினம் (29) மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய மட்டு. தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினருடன் மாவட்ட புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து நேற்று முன்தினம் குறித்த பகுதியிலுள்ள வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது முச்சக்கரவண்டியொன்றில் கேரள கஞ்சாவை வியாபாரத்துக்கு எடுத்துவந்த இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், முச்சக்கரவண்டி ஒன்றும் பொலிஸாரால் கைபற்றப்பட்டுள்ளது.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள மகிழடித்தீவு மற்றும் வீட்டுத்திட்டப் பகுதியைச் சேர்ந்த 46 மற்றும் 37 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி கர்ப்பலா பகுதியிலிருந்து கஞ்சாவை வாங்கிகொண்டு கருவப்பங்கேணி பிரதேசத்தில் விற்பனைக்கு எடுத்துச் சென்றதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

## போழியார் புலம்பல்!



***ஐஞ்சி மணிநேர மின்வெட்டு இப்ப பத்து மணிநேரமாச்சி என்ன சோக்கான நாடுரா தம்பி இது..!***

***மன்னனும் அவரிர அண்ணன் தம்பி சித்தாப்பாட பேரப்புள்ளயலிட ஊட்டுல மட்டும்தானாம் 24 மணிநேர வெளிச்சம்.. மக்கள பட்டினி போட்டு சாகடிக்கிறது மட்டுமல்ல, முழுசாக இருட்டுக்குள தள்ளி உட்டுத்தானுகளே வெறுவாய்கலம் கெட்ட கூட்டம். இது மொட்டுக்கு வாக்களிச்சவங்களுக்குத்தான் இப்ப தெரியுது என்ன பிளைய உட்டுத்தம் எண்டு ஒப்பாரி வைக்கிறாங்க எலுவா?***

# குழாய் நீரை சேமித்து பயன்படுத்துமாறு கோரிக்கை

(கிண்ணியா நிருபர்)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மூலமாக திருகோணமலை மாவட்டத்தில் விநியோகிக்கப்படும் குழாய் நீரானது தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் அடிக்கடி தொடர் மின்வெட்டுக்களால் போதியளவான நீரை மக்களுக்கு வழங்க முடியாதுள்ளதால் நீர் விநியோகிக்கப்படும் தருணத்தில் நீரை சேமித்து சிக்கனமாக பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் திருகோணமலை மாவட்ட பிராந்திய முகாமையாளர் எஸ்.ஜெயந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று (30) ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் அவ்வறிக்கையில் மூதூர், ஈச்சிலம்பற்று, கந்தளாய், புல்மோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள பிரதான நீர் திட்டம் ஊடான சேவை எரிபொருள் மின் தடையால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்திலும் நீர் சேவையை வழங்க சிக்கனமாக பாவனை செய்யுமாறும் பொதுமக்களை மேலும் கேட்டுள்ளார்.

# ஜனாதிபதி தலைமையிலான புத்தரிசி விழாவிற்கு மட்டக்களப்பிலிருந்து 650 கிலோ அரிசி கையளிப்பு



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி அநுராதபுரம் ஜெயபோதியில் நடைபெறவுள்ள புத்தரிசி பெருவிழாவில் இடம்பெறும் அன்னதானத்திற்கென மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 650 கிலோ அரிசி லொறி மூலம் அனுப்பிவைக்கப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள நிர்வாக அதிகாரி ஏ.எம்.ஜௌபர் தெரிவித்தார்.

அரிசி கையளிக்கும் விழா நேற்று (30) கமநல சேவைகள் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்றது. கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்கள நிர்வாக அதிகாரி எம்.எம்.ஜௌபர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளால் பெரும் போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லிலிருந்து பெறப்பட்ட அரிசியை அன்னதானத்திற்காக விவசாயிகள் வழங்கினர். கையளிக்கப்பட்ட அரிசி அநுராதபுரத்திற்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டது.

# கிண்ணியா பிரதேச செயலக சிரேஷ்ட பிரஜைகள் மகா சங்கம் அங்குரார்ப்பணம்



(சீனக்குடா நிருபர்)

கிண்ணியா பிரதேச செயலக கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள முதியோர் சங்கங்களை ஒன்றுபடுத்தி சிரேஷ்ட பிரஜைகள் மகா சங்கம் நேற்று முன்தினம் (29) பிரதேச செயலாளர் எம்.எச்.கனி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது .

மகா சங்க நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக எம்.ரீ.சபறுள்ளாகானும் உப தலைவராக ஏ.எம்.உமர்லெப்பையும், செயலாளராக கே.எம்.மதாரும், உப செயலாளராக செல்வராசாவும், பொருளாளராக எம்.எச்.ஏ.ஹஸன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது பிரதேச செயலாளர், இச்சங்கத்தினூடாக பல நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் சிறப்பாக இயங்கும் சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்திற்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை விரைவில் வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி





(காரைதீவு நிருபர் )

கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள நிந்தவூர் கமு/கமு/அல்-அஷ்றக் தேசிய பாடசாலையின் 2021 இம்முறை தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் முகைதீன் ஹஸன் அஹமட் அமான் அனீக் -180 புள்ளிகளையும், முஹம்மத் றஹீம் தீனா பஸாறத் - 152 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர்.





**இஸ்லாம் பாட அடைவுமட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வு நேற்று (30) சாய்ந்தமருது ஆசிரிய வளநிலையத்தில் இடம்பெற்றது. விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அன்சார் மௌலானா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் முகம்மட் பௌஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (படங்கள் - நற்பிட்டிமுனை நிருபர்)**

# நவீன முறையில் தயாரிக்கப்பட்ட மூலிகை உணவுப்பொருட்கள் அறிமுகம்



(பைஷல் இஸ்மாயில்) -

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் நீண்ட தொலைநோக்குப் பார்வையில் உள்நாட்டு மருத்துவத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தின் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் முதன்முறையாக ஆயுள்வேத முறைப்படி இன்றைய நவீன காலத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட மூலிகை வகை உணவுப்பொருட்கள் அறிமுகப் படுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி இ.ஸ்ரீதரின் ஆலோசனை மற்றும் மேற்பார்வையின் கீழ் தயாரிக்கப்பட்ட வல்லாரை கேக், அமுக்ரா பிஸ்கட், சத்துமா பிஸ்கட் போன்ற உணவு வகைகளை கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துஷித பீ.வணிகசிங்க, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் உள்ளிட்ட கிழக்கு மாகாண பிரதம செயலகம், பிரதி பிரதம செயலகம், மாகாண அமைச்சுகள், மாகாண திணைக்களங்கள் போன்றவற்றிற்கு மாகாண ஆணையாளரினால் அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் அறிவுரைக்கமைவாக மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் 10 வகையான மூலிகை உணவுப்பொருட்களை இன்றைய நவீன காலத்திற்கமைவாக ஆயுள்வேத முறையின் கீழ் தயாரிக்கப்படுகின்றது. இதில் 3 வகையான உணவுப்பொருட்கள் முதற்கட்டமாக தயாரிக்கப்பட்டுள்ளமையும், சத்துமா பிஸ்கட் சிறுவர்களுக்கு போசாக்கை ஏற்படுத்தும் வகையில் விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பசுமை தேசம் விவசாய நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்துவைப்பு





(மட்டக்களப்பு நிருபர்)

பசுமை தேசம் விவசாய நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று முன்தினம் (29) மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேசத்தில் இடம்பெற்றது.

தேசிய கொடியேற்றியதனையடுத்து பயன்தரு மரங்கள் அதிதிகளினால் நடப்பட்டதன் பின்னர் வீட்டுத்தோட்டப் பயிர்களும் நடப்பட்டன. அதனையடுத்து தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் ராகுலநாயகி தலைமையில் நடைபெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்துகொண்டு சிறப்பித்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், விவசாய திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# அக்கரைப்பற்று கடற்கரைப் பிரதேசத்தில் இனந்தெரியாத நபரொருவரின் சடலம் மீட்பு





(அட்டாளைச்சேனை நிருபர்)

அக்கரைப்பற்று கடற்கரைப் பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் வலையில் சிக்கிய நிலையில் இனந்தெரியாத நபரொருவரின் சடலமொன்று நேற்று முன்தினம் (29) மீட்கப்பட்டதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று கடற்கரைப் பிரதேசத்தில் வழமைபோன்று கரைவலை மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே குறித்த சடலம் மீனவர்களின் வலையில் அகப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கரைவலை மீனவர்கள் தமது வலையினை கரைக்கு ஒதுக்கிக்கொண்டிருந்தபோது சடலமொன்று வலைக்குள் இருப்பதை அறிந்த மீனவர்கள் சடலத்தினை கரைக்கு ஒதுக்கியுள்ளனர். கரையொதுக்கப்பட்ட சடலத்தின் கழுத்து மற்றும் தலைப் பகுதியில் இரத்தக்காயங்கள் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சடலம் சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஒருவருடையதாக இருக்கலாம் எனவும் கடலின் ஆழப் பகுதியிலிருந்து படிப்படியாக கரையொதுங்கியபோது தமது கரைவலையில் அகப்பட்டிருக்கலாம் எனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்திற்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற பதில் நீதிவான் எஸ்.எல்.ஏ.றசீட் நேற்று பிற்பகல்வேளை சமுகமளித்து பிரேதத்தினை பார்வையிட்டதன் பின்னர், சடலத்தினை பிரேத பரிசோதனை மேற்கொண்டதன் பின்னர் சடலத்தினை அடையாளம் காண்பதற்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் பிரேதத்தினை வைக்குமாறும், குறித்த சடலம் அடையாளம் காணப்பட்டதன் பின்னர் அதனை உறவினர்களிடம் கையளிக்குமாறும் உத்தரவிட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸார் மற்றும் அம்பாறை தடயவியல் பொலிஸ் குழுவினர் போன்றோர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மக்களின் கஷ்டங்களை அரசாங்கம் வேடிக்கை பார்க்கிறது!

## பதாகையுடன் சைக்கிளில் சபை அமர்வுக்கு சென்ற நகர சபை உறுப்பினர்





(கிண்ணியா நிருபர்)

எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிண்ணியா நகர சபையின் 48 அமர்விற்கு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கட்சியைச் சேர்ந்த கிண்ணியா நகர சபை உறுப்பினர் முஸ்தபா நஸ்ருதீன் சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக சைக்கிளில் நேற்று முன்தினம் (29) சென்றார்.

பொருட்களின் விலையேற்றத்தால் மக்களின் வாழ்க்கையை வதைக்காதே, எரிபொருள் எரிவாயு அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை உடன் நிறுத்து போன்ற வாசகங்களைக்கொண்ட பதாகையை சைக்கிளில் ஏந்தியவாறு சபைக்குச் சென்றார்.

அத்தோடு சபை அமர்விலும் எரிபொருள், எரிவாயு அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களின் தொடர்ந்தேர்ச்சியான விலையேற்றத்தை எதிர்த்து பிரேரணை ஒன்றினையும் முன்வைத்ததுடன், ஊடகங்களுக்கு பின்னர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற தொடர் விலையேற்ற, பொருட்களின் தட்டுப்பாடு அத்தனை தரப்பு மக்களையும் அதலபாதாளத்துக்கு தள்ளியுள்ளது. மக்களின் கஷ்டங்களை அரசாங்கம் அறிக்கைவிட்டு வேடிக்கை பார்க்கின்றது. இவ்வாறான நிலைமை மாற வேண்டும். மக்களின் கல்வி, வைத்தியத்துறை என்பன பாதிக்கப்பட்டு நாட்டை விட்டும் வெளியேற்றும் நிலை ஏற்பட்டுள்ளதுடன், பொருட் கொள்வனவிற்காக வரிசையில் மக்கள் காத்திருக்கின்ற நிலையில் உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளை அரசாங்கம் வெளியிடுகிறது. இவ்வாறான நிலையை மாற்றி மக்களுடைய வாழ்க்கையில் சாதகமான தீர்வினை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மூதூரில் தாய் - சேய் பராமரிப்பு நிலையம் திறந்துவைப்பு



(ஹஸ்பர்)

திருகோணமலை, மூதூர் சுகாதார பிரிவிற்கு உட்பட்ட "கேனிக்காடு" பகுதியில், டுபாயைச் சேர்ந்த அகீலினால் சட்டத்தரணி எம்.எல்.பஜாத்தின் வேண்டுகோளுக்கிணங்க நிர்மாணிக்கப்பட்ட தாய் - சேய் பராமரிப்பு நிலையம் நேற்று முன்தினம் (29) மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஹில்மி முகைதீன் பாவாவினால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச சபை தவிசாளர் அரூஸ், தோப்பூர் வைத்தியசாலை வைத்தியர் மருத்துவர் கஸ்ஸாலி, மருத்துவர் அஞ்சலி, வட்டார உறுப்பினர் பஃஜித், பாடசாலை அதிபர்களான ரஸீன், ஹில்மி , கேனிக்கடு சுனுளு தலைவர் மனாஸிர், பிரதேச அபிவிருத்தி அதிகாரி, மூதூர் சுகாதார பணிமனை உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், ஆசிரியர்கள், உலமாக்கள், பிரதேசவாசிகள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# மூதூர் பிரதேச செயலகத்துக்கு புதிய உதவி பிரதேச செயலாளர் நியமனம்



(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளராக திருமதி எஸ்.நிருபா தனது கடமைகளை அண்மையில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதன்போது மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பி.அறபாத், கணக்காளர் ஜே.நாளிர், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.அலாவுதீன், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.ஜறூஸ் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.

# தென்கிழக்குப் பல்கலையின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் மாணவர்கள் உள்நுழையும் நிகழ்வு



(நூருல் ஹு_தா உமர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சம்மாந்துறையில் அமைந்துள்ள பிரயோக விஞ்ஞான பீட 2019/2020ஆம் வருட மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்துக்குள் உள்நுழையும் நிகழ்வு, அண்மையில் பிரயோக விஞ்ஞான பீட விரிவுரை அரங்கில் இடம்பெற்றது.

குறித்த மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் கடந்தகால கொரோனா அனர்த்தத்தின் காரணமாக 2021ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 06ஆம் திகதிமுதல் சூம் தொழில்நுட்பத்தினூடாக இடம்பெற்று, முதல் பருவத்துக்கான கற்கைகள் பூர்த்தியான நிலையிலேயே இம்மாணவர்களது நேரடியான பல்கலைக்கழக உள்நுழைவு இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வுக்குப் பிரதம பேச்சாளராக பீடாதிபதி கலாநிதி யூ.எல்.செய்னுடீன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் தனது உரையின்போது, மாணவர்கள் பெற்றுள்ள பொன்னான வாய்ப்பை நன்கு பயன்படுத்தி, தங்களது வாழ்வை ஒளிமயமானதாக்கிக்கொள்ள வேண்டும் என்றும், இக்கட்டான இந்த காலகட்டத்தில் மாணவர்களுக்காக அரசு செலவிடும் ஒவ்வொரு ரூபாவும் ஞமாணவர்களுக்கும் நாட்டுக்கும் நன்மையளிக்கக்கூடியதா க அமையவேண்டும் என்றும், அதற்காக மாணவர்கள் தங்களுக்குக் கிடைத்துள்ள இந்த நல்ல சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களின் முதல்நாள் பிரவேசத்தின்போது




வளாகத்திலுள்ள ஆய்வுகூடங்கள், நூலகம் மற்றும் பல்கலைக்கழகத்தின் ஒலுவிலிலுள்ள பிரதான நூலகம் உள்ளிட்ட இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, மாணவர்கள் பார்வையிட்டனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட 2019/2020ஆம் வருடத்துக்காக 257 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இதில் 125 மாணவர்கள் பௌதிகவியலுக்கும் 132 மாணவர்கள் உயிரியல் பிரிவிலும் இணைந்துகொண்டு கல்விகற்று வருகின்றனர்.

இந்நிகழ்வின்போது பிரயோக விஞ்ஞான பீட திணைக்களங்களின் தலைவர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் உதவிப் பதிவாளர் எஸ்.அர்ச்சனா, விடுதிப் பொறுப்பாளர்கள் மற்றும் உடற்கல்வி போதனாசிரியர் ஐ.எம்.கடாபி உள்ளிட்டவர்களும் கல்விசாரா உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# வரலாற்று சாதனை படைக்கும் கல்முனை அஸ்ஸுஹரா பாடசாலை

கிழக்கிலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை எனும் மாநகரில் நாகமரத்தடி வளாகில் கலங்கரை விளக்காய் அறிவொளி வீசிக்கொண்டிருக்கும் கமு/கமு/அஸ்ஸுஹரா வித்தியாலயம், தற்போது 650இற்கும் மேற்பட்ட மாணவர்களையும் 18 ஆசிரியர்களையும் உள்ளடக்கிய பழம்பெரும் பிரசித்திபெற்ற ஆரம்பக் கல்வி பாடசாலையாகும்.



1933ஆம் ஆண்டு இராசவாச முதலியார் எம்.எஸ்.காரியப்பர் இப் பகுதியில் வன்னியராய் வந்தமை கல்வித் துறையில் குறிப்பாக, பெண்களுக்கும் பொதுவாக ஆண்களுக்கும் கிடைத்த ஒரு வரப்பிரசாரமாகும். எம்.எஸ் காரியப்பரின் அயராத உழைப்பினால் 1936ஆம் ஆண்டு கல்முனை தெற்கு 04ஆம் குறிஞ்சியில் அரசாங்கத்தினால் ஒரு பெண் பாடசாலை அமைக்கப்பட்டது. இப் பாடசாலையின் முதலாவது தலைமை ஆசிரியை என்ற நாமத்துக்கும் பெருமைக்கும் உடையவர் தங்கம்மா ஆறுமுகமாவார். அவ்வம்மையாரின் நாமம் இப்பாடசாலை வரலாற்றில் ஒரு மைக்கலாகும்.

இப்பாடசாலையின் ஆரம்பகால பெயர் கல்முனைக்குடி அரசினர் முஸ்லிம் பாடசாலை என்ற பெயராகும். இப்பாடசாலையின் ஆரம்பத்தில் க.பொ.த. (உ/த) வரை கல்வி நடவடிக்கைகள் இருந்தன. அதன்பின்னர் 1971ஆம் ஆண்டு மகளிர் கல்லூரிகளின் ஆரம்பம் இப்பாடசாலையின் எழுச்சியில் வீழ்ச்சி ஏற்பட வழிவகுத்ததெனலாம். இதன் காரணமாக தரம் ஐந்து வரையான வகுப்புகளை மட்டும் கொண்ட பாடசாலையாக மாற்றம் பெற்றது.

1940ஆம் ஆண்டு இப்பாடசாலையின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க முக்கிய நிகழ்வு இடம்பெற்றது. அதாவது, 1940ஆம் ஆண்டு முதலாம் மாதம் பதினோராம் திகதி இப்பாடசாலையில் நியமனம் பெற்ற திருமதி எம்.பாத்துமுத்து என்பவர் இலங்கையில் முதலாவது முஸ்லிம் பெண் ஆசிரியராக விளங்குவது இப் பாடசாலையில் வரலாற்றுச் சான்றாக காணப்படுகின்றது. அதேநேரம் இப்பாடசாலையில் 1947ஆம் ஆண்டு நடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வி எம்.எம்.ஆயிஸா உம்மா என்பவர் மட்டுமே முதலாவதாக சித்தியடைந்ததும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் 1970ஆம் ஆண்டு இப்பாடசாலை கலவன் பாடசாலையாக பெயர் மாற்றம் பெற்று 1981இல் அஸ்ஸுஹரா வித்தியாலயம் என்ற பெயர் மாற்றம் பெற்று இன்றுவரை இப்பெயரிலேயே அழைக்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் இப்பாடசாலையில் முதல் கட்டிடமாக அப்போதைய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சி.அஹமதின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் 60/20 விஸ்தீரணமுடைய கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டது. அதன்பிறகு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சருமான ஏ.ஆர்.எம். மன்ஸூரின் நிதி ஒதுக்கீட்டில் சுற்றுமதில் மற்றும் சிலுவை வடிவிலான வகுப்பறை கட்டிடத்தை புனர் நிர்மாணம் செய்தார்.



இவ்வாறு பரிணாம வளர்ச்சி கண்ட இப்பாடசாலை இன்று வரலாற்றில் தடம் பதித்த வெற்றியினை கண்டுள்ளது. கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட கல்முனை அஸ்ஸுஹரா வித்தியாலயத்தின் வரலாற்றிலேயே இம்முறை 6 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றதோடு 39 மாணவர்கள் 100 புள்ளிக்கு மேல் பெற்று இப் பாடசாலைக்கு பெருமை ஈட்டிக் கொடுத்ததோடு, வரலாற்றுச் சாதனையையும் படைத்துள்ளனர்.

இதுவரைகாலமும் இப்பாடசாலையில் 4 மாணவர்கள் மட்டுமே பாடசாலை வரலாற்றில் அதிகூடிய சித்தியடைந்த மாணவர்களாக காணப்பட்டனர்.

இப்பாடசாலைக்கு மாணவர்களின் புதிய அனுமதியின்மை குறைபாடு, கற்றல் செயற்பாடுகளில் மாணவர்களின் ஆர்வமின்மை போன்ற பல காரணங்களினால் மூடுவிழா காணவிருந்த இப்பாடசாலை முன்னாள் அதிபர் ஏ.எல்.எம். கமால் பொறுப்பேற்று மிக கஷ்டங்களுக்கு மத்தியில் சிறப்பாக நடத்தியதைத் தொடர்ந்து கடந்த 2020ஆம் ஆண்டு புதிய அதிபராக கடமையேற்ற எம்.எஸ்.எச்.ஆர்.மஜிதியியா குறுகிய காலத்திற்குள் தனது ஆளுமையினாலும், திறமையினாலும் பாடசாலை ஆசிரியர்களின் அயராத உழைப்பினாலும், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்களின் ஒத்துழைப்புகளினாலும் குறுகிய காலத்திற்குள் 6 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்திபெற வைத்து வெற்றிபெற வைத்தமை பாராட்டத்தக்க வரலாற்று நிகழ்வாகும்.

கல்முனை முஸ்லிம் கல்விக் கோட்டத்தில் முன்னணி ஆரம்பக் கல்வி பாடசாலையாகத் திகழும் இப்பாடசாலையின் அதிபர் எம்.எச்.எஸ்.ஆர். மஜிதியியாவின் வழிகாட்டலினாலும், பெற்றோர், ஆசிரியர் மாணவர்களின் அயராத முயற்சியினாலும் பெறப்பட்டுள்ள இந்த வெற்றிக்குக் காரணமாக அமைந்த அனைவருக்கும் பாடசாலை சமூகத்தினர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

மேலும் இப்பாடசாலையில் பௌதீக வள தேவைகள் அதிகமாக காணப்படுவதனால் பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் கடும் கஷ்டங்களுக்கு மத்தியில் தனவந்தர்கள் மற்றும் பெற்றோர்களைக்கொண்டு இரண்டாம் மாடி கட்டிடத்தில் 04 வகுப்பறைகளைக் கட்டி முடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.



எனவே, அதற்கான ஒத்துழைப்புகளையும் உதவிகளையும் ஊர் நலன் விரும்பிகள் முன்வந்து தந்துதவுமாறு பாடசாலை சமூகம் வேண்டுகோள் விடுக்கின்றது.

**தொகுப்பு**
**சர்ஜுன் லாபீர்**
**(நாவிதன்வெளி நிருபர்)**

# எரிபொருள் பெற்றுத்தருமாறுகோரி புத்தளத்தில் மக்கள் ஆர்ப்பாட்டம்

## இரவு நேரங்களில் டீசல் வழங்கப்படுவதாகவும் குற்றச்சாட்டு







(ரஸீன் ரஸ்மின்)

டீசல் உள்ளிட்ட எரிபொருட்களை வழங்குமாறு கோரி புத்தளம் - மதுரங்குளி பல நோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் (29) இரவு வாகன சாரதிகளும் பொதுமக்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான எஸ்.எச்.எம். நியாஸ் துசார பத்திரகே மற்றும் புத்தளம் பிரதேச சபை உறுப்பினர் நிமால் ஏக்கநாயக்க உள்ளிட்டவர்களுடன் வாகன சாரதிகளும், பொது மக்களும் என நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதன்போது குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக கொள்கலன்களையும், சுலோகங்களையும் ஏந்தியவாறும், எதிர்ப்பு கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர், புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் ஒரு பகுதியை மறைத்து தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புத்தளத்தில் கடந்த சில தினங்களாக டீசலுக்கு தொடர்ந்து தட்டுப்பாடு நிலவி வருகிறது.

வாகன சாரதிகள் டீசலை கொள்வனவு செய்வதற்காக இரவு பகல் பாராமல் தொடர்ச்சியாக வரிசையில் காத்து நிற்கின்றனர். அத்துடன், புத்தளம், மதுரங்குளி, கற்பிட்டி உள்ளிட்ட பகுதிகளில் காணப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக வாகனங்களும் நீண்ட வரிசையில் தரித்து நிற்பதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் கொரோனா பரவல் ஏற்படத் தொடங்கியதற்கு பின்னர் பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு என்பனவற்றின் விலை அதிகரித்துவருகிறது.

அத்துடன் புத்தளம், முந்தல், கற்பிட்டி உள்ளிட்ட பல பகுதிகளில் தனியார் மற்றும் வரையறுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் "டீசல் இல்லை", "பெற்றோல் இல்லை" என்கின்ற பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரவு நேரங்களில் மட்டும் டீசல் விநியோகிக்கப்படுவதாக வாகன சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

# லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதி மாதம்பையில் விபத்து

## இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)

மாதம்பை காக்காப்பள்ளிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (29) இரவு இடம்பெற்ற வீதி விபத்து சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாதம்பை, காக்காப்பள்ளிய பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து சம்பவம் இடம்பெற்ற நேற்றுமுன்தினம் இரவு காக்காப்பள்ளிய பகுதியிலிருந்து மெதகம பகுதியை நோக்கிப் பயணம் செய்த டிமோ பட்டா ரக லொறியொன்றும், எதிர்த் திசையில் இருந்து பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும், மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞன் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், மோட்டார் சைக்கிளில் பின் பக்கமாக இருந்து பயணம் செய்தவர் தொடர்ந்தும் சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் மாதம்பை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுபான்மை மக்களுக்கு நம்பிக்கை தரும் வகையில் அரசாங்கத்திடம் வெளிப்படைத்தன்மை கிடையாது

## இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் ஹக்கீம் எடுத்துரைப்பு



இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஹூக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (29) நடைபெற்றது. இச்சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயும், உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தினை பொறுத்தவரை, எதிர்காலம் குறித்து சிறுபான்மை சமூகங்களுக்கு நம்பிக்கை ஏற்படுகின்ற விதத்தில் இந்த அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட்டு, உரிய உத்தரவாதங்களை வழங்கத் தவறிவிட்டுள்ளது. அத்துடன், தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடிப்புச் செய்யும் விவகாரமும் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கரிடம் வலியுறுத்திக் கூறினார்.

அதிகாரப் பகிர்வுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்பட்டன.

தமிழ்ப்பேசும் மக்கள் என்ற வார்த்தைப் பிரயோகம் தமிழ், முஸ்லிம்களை உள்வாங்கும் விடயமாகும். உத்தியோகபூர்வ அறிக்கைகளில், தமிழ்ப்பேசும் மக்கள் என்ற வார்த்தைப் பிரயோகத்தை கையாள்வதற்கான முஸ்லிம் தரப்பின் கருத்தை இந்தியத் தரப்பினர் அங்கீகரித்தனர்.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்டபோது, முஸ்லிம்களின் அபிலாஷைகள் குறித்த விவகாரங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழர் தரப்பின் பிரச்சினைகள் குறித்து ஆழமான புரிந்துணர்வுடன் செயற்பட்டது. அதேவேளையில், தமது கட்சி முஸ்லிம் சமூகத்தின் விவகாரங்களில் அக்கறையுடன் மிகவும் நிதானமாக அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதையும் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

இந்திய உதவியுடன் அமுல்படுத்தப்படும் மீன்பிடித்துறைமுக அபிவிருத்தித் திட்டங்களில் ஒலுவில், மூதூர் போன்ற துறைமுகங்களையும் உள்வாங்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டது.


இரு நாடுகளுக்கிடையிலான சமய, கலாசார விவகாரங்களில் சகல இனங்களும் இந்திய துணைக் கண்டத்துடனும், இலங்கையுடனும் தொடர்புபட்டு வளர்ச்சியடைந்துள்ளன. இதனை மேம்படுத்துவதற்கு சகல சமயங்களையும் உள்ளடக்கிய பயனுள்ள தொடர்பாடல் பொறிமுறையொன்றை இந்தியா முன்னெடுக்கும் என இதன்போது நம்பிக்கை வெளியிடப்பட்டது.



சர்வதேச வர்த்தக சபையின் தலைவர் ஷனில் அந்தனி பெர்னாண்டோ உட்பட அதன் ஏனைய அங்கத்துவ பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை நேற்றுமுன்தினம் (29) எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்து சபை உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் வரலாறு காணாத சவால்கள் குறித்து கலந்துரையாடினர்.

# யாழில் இருந்து மட்டக்களப்புக்கு கஞ்சா கடத்திய நால்வர் கைது

(கனகராசா சரவணன்)



யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பு சந்திவெளி பிரதேசத்திற்கு பஸ்ஸில் கஞ்சா கடத்தி வந்து அதனை சந்திவெளி பகுதியிலுள்ள பற்றைகாட்டு பகுதியில் விற்பனைக்காக பொதி செய்து கொண்டிருந்த யாழ். பளை பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பேரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (29) மாலை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை குறித்த பற்றைகாட்டுபகுதியை சுற்றிவளைத்து முற்றுகையிடட்டனர். இதன்போது கேரள கஞ்சாவை விற்பனைக்காக பொதி செய்து கொண்டிருந்த நான்கு பேரை 165 கிராம் கஞ்சாவுடன் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் பளை பகுதியைச் சேர்ந்த 29, 24, 24, 25 வயதுடையவர்கள் எனவும் இவர்களில் ஒருவர் மட்டு கல்குடா பிரதேசத்தில் திருமணம் முடித்துள்ளதாகவும் இவர் கஞ்சாவை மட்டக்களப்பிற்கு கொண்டுவந்து விற்பனை செய்வதற்காகவும் அங்கிருந்து பஸ்வண்டியில் இருவர் கஞ்சாவை கடத்தி அதன் பின்னர் மோட்டார் சைக்கிளில் பிரயாணித்து சந்திவெளியை வந்தடைந்துள்ளனர்.

இதன் பின்னர் குறித்த பகுதியில் வைத்து கஞ்சாவை பொதி செய்யும்போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பொலிஸ் திணைக்களத்துக்கு இந்தியாவிடமிருந்து ஜீப் வண்டிகள்




இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் பொலிஸ் திணைக்களத்துக்கு 750 ஜீப் வண்டிகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று (30) கைச்சாத்தானது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் மற்றும் மஹேந்திரா நிறுவனத்தின் பிரதானி ஜோய்தீப் மொய்ட்ரா ஆகியோருக்கிடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

# புத்தாண்டு விசேட பஸ் சேவை ஏப்ரல் 8 முதல் ஆரம்பம்

தமிழ் - சிங்கள புத்தாண்டின்போது தமது சொந்த இடங்களுக்கு செல்ல விரும்பும் நபர்களுக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இருந்து விசேட பஸ் சேவையை ஈடுபடுத்தவுள்ளது.

பஸ் சேவை இரண்டு கட்டங்களாக இயக்கப்படும். முதல் கட்ட பஸ்கள் ஏப்ரல் 8ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை இயக்கப்படும் என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை கொழும்பு, செபஸ்டியன் மாவத்தை பிரதான பஸ் நிலையத்தின் பஸ் சேவைகளுக்கான தேவை அதிகரித்தால் பஸ் நடத்துனர்களுக்கு தற்காலிகப் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் இலவசமாக வழங்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் கடவத்தை, கடுவல பஸ் நிலையங்கள் மற்றும் மாகும்புர பிரதான பஸ் தரிப்பிடம் ஆகியவற்றிலிருந்து பஸ்கள் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளன.

இரண்டாம் கட்டத்தின் கீழ் காலி, மாத்தறை, எம்பிலிப்பிட்டிய, மொனராகலை, பதுளை, ஹட்டன், கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களுக்கு தேவைக்கு ஏற்ப பஸ்கள் தற்காலிக அனுமதிப்பத்திரத்தில் இயக்கப்படவுள்ளன.

புத்தாண்டுக் காலத்தில் தொடர்ச்சியான சேவைகளை வழங்கும் வகையில் மேலதிக பஸ்கள் இயக்கப்படவுள்ளன.

# இராணுவத்தினரால் பயிர்ச்செய்கை திட்டம் ஆரம்பித்து வைப்பு





அரசின் தேசிய பசுமைத் திட்டத்தின் ஒரு கட்டமாக, இலங்கை இராணுவ தலைமையக வளாகத்தில் பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியும் மற்றும் பசுமை விவசாய செயல்பாட்டு மையத் தலைவருமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் பங்கேற்பில் 'தோட்டத்திலிருந்து ஆரம்பிப்போம்' எனும் தொனிப்பொருளிலான பயிர்ச்செய்கைத் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது

# துப்பாக்கி வைத்திருந்தவர் ஹொரவப்பொத்தானையில் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் துப்பாக்கியொன்றினை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை ஹொரவப்பொத்தானை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக் கமைய கடந்த திங்கட்கிழமை மாலை ஹொரவப் பொத்தானை றஸ்னகவெவ பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரை கைது செய்துள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 65 வயதுடைய ஹொரவப்பொத்தானை றஸ்னகவெவ பகுதியைச் சேர்ந்தவர் என்பது ஆரம்ப கட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

துப்பாக்கியினை பயன்படுத்தி சந்தேக நபர் குற்றச்செயல்கள் உள்ளிட்ட கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளாரா என்பதனை அறிந்து கொள்வதற்காக பல கோணங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரவப்பொத்தானை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைத்து 13 மில்லியன் ரூபா பெறுமதியான சொகுசு வேன் ஒன்றைப் பாடசாலைக்கு அன்பளிப்பு செய்துள்ளது. முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவி பெரோஸா முஸம்மில் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் இணைந்து கடந்த திங்கட்கிழமை பாடசாலை அதிபர் திருமதி நஸ்ரியா முனாஸிடம் குறித்த சொகுசு வேனை உத்தியோகபூர்வமாகக் கையளித்தனர். (அஷ்ரப் ஏ சமத்)

# உலக செய்திகள்



## 36 நாட்களை எட்டிய உக்ரைன் - ரஷ்ய மோதல்:

# சமாதானப் பேச்சில் உடன்பாடு: முடிவுக்கு வருமா போர்?

## நேட்டோ உச்சிமாநாட்டில் பங்கேற்க உக்ரைனுக்கு அழைப்பு









உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல் இன்று 36ஆவது நாளாக தொடர்கின்ற நிலையில், தலைநகர் கீவ் மீது தாக்குதலைக் குறைத்து படைகளைத் திரும்பப் பெறுவதாக ரஷ்யா ஒப்புக் கொண்டுள்ளது.

இந்நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியுடன் ரஷ்ய ஜனாதிபதி புட்டின் நேருக்கு நேராக பேச்சு நடத்த வாய்ப்பு உருவாகியுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் அமைச்சர்கள் துருக்கியில் நடத்திய பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டதையடுத்து ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைன் இணைவதற்கு ரஷ்யா தரப்பில் ஆட்சேபம் இல்லை என்று ரஷ்யாவின் தரப்பில் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற குழுவின் தலைவர் விளாதிமீர் மெடின்ஸ்கி தெரிவித்தார்.

ரஷ்யா - உக்ரைன் போர் நேற்று 35ஆவது நாளாக தாக்குதல் நடத்திய நிலையில், தலைநகர் கீவ் மற்றும் செர்னிவ் நகரங்களில் இராணுவ நடவடிக்கையைக் குறைக்க ரஷ்யா ஒப்புக்கொண்டுள்ளது. ''இது படைக்குறைப்புதான் தவிர, போர் நிறுத்தம் அல்ல'' என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

**நேட்டோ உச்சிமாநாட்டில் பங்கேற்க உக்ரைனுக்கு அழைப்பு**

பிரஸ்செல்ஸில் நடைபெறவுள்ள நேட்டோ கூட்டமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் உச்சிமாநாட்டில் பங்கேற்க உக்ரைனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில், ஏப்ரல் 6, 7ஆம் திகதிகளில் நேட்டோ பொதுச் செயலாளர் Jens Stoltenberg, தலைமையில் நேட்டோ உச்சிமாநாடு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அவுஸ்திரேலியா, பின்லாந்து, ஜோர்ஜியா, ஜப்பான், நியூசிலாந்து, சுவீடன், கொரிய குடியரசு ஆகிய நாடுகளும் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் தொடங்கியதிலிருந்து 30 நேட்டோ நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களால் கூட்டம் கூட்டப்படுவது இது 2ஆவது முறையாகும்.

சில அமைச்சர்கள் வீடியோ இணைப்பு மூலம் கலந்துகொள்வார்கள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரஷ்யாவிடம் யாரும் ஏமாற வேண்டாம் - அமெரிக்கா**

''கீவ் மீது இராணுவ நடவடிக்கையை குறைப்பதாக அறிவித்த ரஷ்யாவிடம் எவரும் ஏமாறவேண்டாம்'' - இவ்வாறு அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின் செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி தெரிவிக்கையில், திடீரென படைகளைக் குறைப்பதாக ரஷ்யா அறிவித்திருப்பதை விமர்சித்தார்.

''சிறியளவிலான படைகள் கீவ் நகரை விட்டு வெளியேறியிருப்பதாக தகவல் வெளியானது. ஆனால், இது படைகளை இடம் மாற்றும் உத்திதான். உக்ரைனின் இதரப் பகுதிகளில் கடுமையான மோதல்களை இனி உலகம் காணப்போகிறது'' என்று ஜோன் கிர்பி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**36ஆவது நாளை எட்டிய போர்**

நேட்டோ அமைப்பில் இணைய முயன்ற உக்ரைன் மீது ரஷ்யா நடத்திவரும் போர்த் தாக்குதல் இன்று 36ஆவது நாளை எட்டியுள்ளது. முதலில் தலைநகர் கீவ், 2ஆவது பெரிய கார்கீவ், லிவிவ் மற்றும் வர்த்தகம், துறைமுகம் பகுதியான மரியுபோல் உள்ளிட்ட நகரங்களை கைப்பற்ற ரஷ்யா, தரைவழி மற்றும் வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இதில், கெர்சன் நகர் மட்டும் முழுமையாக ரஷ்ய கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது. மற்ற நகரங்கள் சின்னாபின்னாமாகி மக்கள் வாழ தகுதியற்ற நிலையிலுள்ளன. இருப்பினும், மரியுபோல், கார்கீவ், லிவிவ் உள்ளிட்ட நகரங்களில் ரஷ்யா இன்னும் கடுமையான சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. கடந்த சில வாரங்களாக ரஷ்யா கட்டுப்பாட்டிற்குள் இருந்த இடங்களை ஒவ்வொன்றாக உக்ரைன் படைகள் தன் வசப்படுத்தி வருகின்றன. இதனால், உக்ரைனின் கவனத்தை திசைதிருப்பும் வகையில் மேற்கு உக்ரைன், கிழக்கு உக்ரைன் என நாட்டை இரண்டாக உடைக்கும் முயற்சியில் ரஷ்யா இறங்கியுள்ளது. முதலில் கிழக்கு உக்ரைனிலுள்ள டான்பாஸ் பிராந்தியத்தைக் கைப்பற்ற கவனம் செலுத்திவருகிறது.

இதன் காரணமாக ட்ரோஸ்டியானெட்ஸ் நகரம் உக்ரைன் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது. இதேபோல், தலைநகர் கீவ்வின் வடமேற்கேயுள்ள இர்பின் நகரை உக்ரைன் படைகள் ரஷ்யாவிடமிருந்து மீட்டெடுத்துள்ளன. இந்தச் சூழலில், டான்பாஸ் விவகாரத்தில் சமரசம் செய்துகொள்ளத் தயாராக இருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் இலக்கே டான்பாஸ் பிராந்தியத்தைக் கைப்பற்றி, உக்ரைன் ஜனாதிபதியை சரணடைய செய்வதுதான். ஆனால், இந்த விவகாரத்தில் சமரசத்திற்கு தயார் என உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளது பேச்சுக்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ளன.

**சமாதான பேச்சுவார்த்தை**

இதற்கிடையே, இஸ்தான்புல்லில் ரஷ்ய மற்றும் உக்ரைன் தூதுக்குழுக்கள் இடையே நேற்றுமுன்தினம் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் சுமூக உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகத் தெவிக்கப்படுகிறது.

உக்ரைன் - ரஷ்யா இடையே ஒரு மாதத்திற்கு மேல் போர் நடைபெறும் நிலையில், துருக்கியின் இஸ்தான்புல் நகரில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பேச்சுவார்த்தையில் ரஷ்யாவைச் சேர்ந்த விளாதிமிர் மெடின்ஸ்கி உள்ளிட்ட குழுவினரும், உக்ரைன் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஓலஸ்கி ரெஸ்னிகோவ் உள்ளிட்ட குழுவினரும் துருக்கி பாதுகாப்புத்துறை அமைச்சர் ஹூல்சி அகார், வெளியுறவுத்துறை அமைச்சர் மெவ்லட் சாவ்சோலு உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

சுமார் மூன்று மணிநேரம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நடுநிலை நாடாகவும், அணு ஆயுதம் இல்லாத நிலையிலும் தொடர உக்ரைன் ஒப்புதல் அளித்துள்ளதாக ரஷ்ய பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் அலெக்சாண்டர் ஃபோமின் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட முன்னேற்றத்தையடுத்து உக்ரைன் தலைநகர் கீவ், செர்னிகீவ் நகரங்களில் இராணுவ நடவடிக்கைகளை தீவிரமாக குறைக்க ரஷ்யா ஒப்புதல் அளித்ததாக கூறப்படுகிறது.

அதேபோல், முறையான அமைதி ஒப்பந்தத்தை உக்ரைன் தரப்பில் தாக்கல் செய்தால் அதனை பரிசீலிக்க தயாராகவுள்ளதாகவும் ரஷ்யா தரப்பில் பேச்சுவார்த்தையின்போது தெரிவித்ததாக கூறப்படுகிறது.

பேச்சுவார்த்தைக்குப் பின்னர் பேசிய ரஷ்ய பிரதிநிதி விளாடிமிர் மெடின்ஸ்கி, ''அர்த்தமுள்ள பேச்சுவார்த்தை நடந்துள்ளது. உக்ரைனின் கோரிக்கைகள் ரஷ்ய ஜனாதிபதி புட்டினிடம் வைக்கப்படும். ஸெலென்ஸ்கியும், புட்டினும் சந்திக்கலாம்'' என்றார். புட்டின் - ஸெலென்ஸ்கி இடையே நடக்கும் பேச்சுவார்த்தையால் போர் முடிவுக்கு வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இருநாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்ற நிலையில், சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை மேலும் 5 சதவீதம் குறைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதேபோல், ரஷ்ய நாணயமான ரூபிளின் மதிப்பு 10 சதவீதம் வரை உயர்ந்துள்ளதாக அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த பேச்சுவார்த்தைக்குப் பின் ரஷ்ய பாதுகாப்பு துணை அமைச்சர் அலெக்சாண்டர் போமின் தெரிவிக்கையில், ''உக்ரைன் தலைநகர் கீவ், செர்னிவ் மீதான இராணுவ நடவடிக்கைகளை பல மடங்கு குறைக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது'' - என்றார்.

**பேச்சுவார்த்தைக்கு சென்ற 3 பேரின் உடலில் விஷம்**

உக்ரைன் - ரஷ்யா இடையே கடந்த மார்ச் 3ஆம் திகதி போர் நிறுத்தம் பற்றி பேச்சு நடந்தது. இதில், உக்ரைன் சார்பில் செல்சியாவின் செல்வந்தர் ரோமன் அப்ரமோவிச், உக்ரைன் எம்பி ருஸ்டெம் உமெரோ உள்ளிட்ட சிலர் பங்கேற்றனர். இந்த பேச்சுவார்த்தையின்போது, அப்ரமோவிச், ருஸ்டெம் உமெரோ உள்ளிட்ட 3 பேருக்கு திடீரென உடல்நலம் குன்றியது. இது தொடர்பாக ஒருவர் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில்,

''பேச்சுவார்த்தையின்போது அப்ரமோவிச் உள்ளிட்டோர் சொக்லெட் சாப்பிட்டு, தண்ணீர் மட்டுமே குடித்துள்ளனர். அவர்களின் உடலில் விஷத்தன்மை ஏற்பட்டுள்ளது. சிறிதுநேரம் மூன்று பேரும் மயக்க நிலையில் இருந்தனர். அவர்களின் கண்கள் சிவந்திருந்தன'' - என்று தெரிவித்துள்ளார்.

இதேபோல், சில செய்தி நிறுவனங்களும் இரசாயன ஆயுத பாதிப்பால் ஏற்பட்ட விஷத்தன்மையால் அவர்களின் உடல்நலம் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்துள்ளது.

**ஏவுகணை தாக்குதலில் 7 பேர் பலி**

உக்ரைனில் அரச கட்டடம் மீது ரஷ்யா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 33 பேர் காயமடைந்துள்ளனர்.

தெற்கு நகரமான மைகோலேவ் பகுதியிலுள்ள பிராந்திய அரச கட்டடத்தின் மீது ரஷ்யப் படைகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் பெரிய துளையுடன் அந்தக் கட்டடம் சிதைந்தது.

புகையுடன் பற்றி எரியும் தீயின் நடுவே மீட்புப் பணியாளர்கள் இடிபாடுகளிலிருந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். ரஷ்யாவின் படையெடுப்பால் அச்சமடைந்து ஏராளமான பொதுமக்கள் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டை நாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

**அண்டைநாடுகளில் 39 இலட்சம் பேர் தஞ்சம்**

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையால் இதுவரை 39 இலட்சத்திற்கும் அதிகமானோர் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளதாக ஐ.நா. அகதிகளுக்கான முகமை தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ தாக்குதல் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக நடைபெற்றுவரும் நிலையில், ரஷ்யாவிற்கு உக்ரைன் இராணுவம் தக்க பதிலடி கொடுத்துவருகிறது. ரஷ்யத் தாக்குதலினால் வாழ்வாதாரம் இழந்த உக்ரைன் மக்கள் அகதிகளாக பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

அதிகபட்சமாக போலந்தில் 23 இலட்சம் பேரும், ருமேனியாவில் 6 இலட்சம் பேரும் புகலிடம் கேட்டு தஞ்சமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

65 இலட்சம் பேர் வாழ்வாதாரம் இழந்து உள்நாட்டிலே இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**60 மத கட்டடங்கள் அழிப்பு**

கடந்த ஒரு மாத போரில் தனது நாட்டில் இருந்த 60இற்கும் மேற்பட்ட மதம் சார்ந்த கட்டடங்களை ரஷ்யப் படைகள் அழித்து விட்டதாக உக்ரைன் இராணுவம் குற்றஞ்சாட்டியுள்ளது.

மேற்கு உக்ரைனின் ரிவ்னே பிராந்தியத்தில் உள்ள எண்ணெய்க் கிடங்கு மீது ரஷ்யா நேற்றுமுன்தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

உக்ரைனில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகள் கிடைக்கச் செய்வதற்காக, அங்கு மனிதநேய அடிப்படையில் போர்நிறுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளை ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரெஸ் தொடங்கியுள்ளார்.

**சிவப்பு காட்டுக்குள் நுழைந்த ரஷ்யப் படை**

**ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை**

உக்ரைனில், கதிர்வீச்சு பாதிப்பு அதிகமுள்ள செர்னோபிலின் சிவப்பு காடுகளுக்குள் ரஷ்ய இராணுவத்தினர் எவ்வித கவச உடையும் அணியாமல் செல்வதால் அவர்கள் உடல்நலம் கடுமையாக பாதிக்கப்படும் என ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

35 ஆண்டுகளுக்கு முன் செர்னோபில் அணுஉலையில் ஏற்பட்ட விபத்தால், அது மனிதர்கள் வாழ தகுதியில்லாத இடமாக மாறியது. கதிர்வீச்சால் பாதிக்கப்பட்ட பைன் மரங்கள் சிவப்பாக மாறியதால் அவை சிவப்பு காடுகள் என அழைக்கப்பட்டன.

செர்னோபிலை கைப்பற்றிய ரஷ்ய வீரர்கள், கதிர்வீச்சு தாக்கிய நிலத்தில் கனரக இராணுவ வாகனங்களை இயக்குவதால் அப்பகுதியில் கதிர்வீச்சின் அளவு 7 மடங்கு அதிகரித்தது. அப்போது கிளம்பும் புழுதிக் காற்றை அவர்கள் சுவாசிப்பதால் உள்ளுறுப்புகள் கடுமையாக பாதிக்க வாய்ப்புள்ளது.

சிவப்பு காடுகளுக்குள் கவச உடை அணிந்தவர்களே செல்ல தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், ரஷ்ய வீரர்கள் எவ்வித பாதுகாப்புமின்றி நடமாடுவது தற்கொலைக்கு சமம் என அங்குள்ள பணியாளர்கள் விமர்சிக்கின்றனர்.


**கடத்தப்படும் நோயாளிகள்**

மகப்பேறு மருத்துவமனையிலிருந்த 70இற்கும் மேற்பட்ட நோயாளிகள் மற்றும் மருத்துவ ஊழியர்களை ரஷ்யப் படைகள் வலுக்கட்டாயமாக அந்நாட்டிற்கு கடத்தப்பட்டதாக மரியுபோல் நகர சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

மரியுபோலிலிருந்து 20,000இற்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் விருப்பத்திற்கு மாறாக ரஷ்யாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக உக்ரைன் செய்தி நிறுவனம் கூறுகிறது.

உக்ரைன் குடிமக்களை வலுக்கட்டாயமாக கடத்தவில்லை என கிரெம்ளின் முன்பு கூறியது ரஷ்யாவிற்கு வந்தவர்கள் தானாக முன்வந்து அவ்வாறு செய்ததாக தெரிவித்தது.

## பெரும்பான்மையை இழந்தது இம்ரான் அரசு: விரைவில் பதவி துறக்கும் பாக். பிரதமர்



பாகிஸ்தானில் கூட்டணி கட்சி ஆதரவை விலக்கிக்கொண்டதால், இம்ரான்கான் தலைமையிலான அரசு பெரும்பான்மையை இழந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி மற்றும் பணவீக்கம் ஆகியவை காரணமாக இம்ரான்கானுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தன.

இந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு ஏப்ரல் 3ஆம் திகதி நடைபெறும் நிலையில், வாக்கெடுப்புக்கு முன்பாகவே இம்ரான்கான் தலைமையிலான அரசு பெரும்பான்மையை இழக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. திடீர் திருப்பமாக இம்ரான்கான் அரசுக்கு அளித்த ஆதரவை விலக்கிக் கொள்வதாகவும், எதிர்க்கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு ஆதரவு அளிப்பதாகவும் MQM கட்சி அறிவித்துள்ளது.

பெரும்பான்மையை நிரூபிக்க 172 இடங்கள் தேவை என்ற நிலையில் இம்ரான்கான் தலைமையிலான ஆளுங்கட்சியின் பலம் 164 ஆகக் குறைந்துள்ளது.

MQM கட்சி அறிவிப்பால் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் பலம் 177 ஆக உயர்ந்துள்ளது. பெரும்பான்மையை இழந்துள்ளதால், விரைவில் இம்ரான்கான் பிரதமர் பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# யோர்க்ஷையர் கிரிக்கெட் கழகத்தில் இணைந்த திமுத்



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவரான திமுத் கருணாரத்ன இங்கிலாந்தில் நடைபெற்ற கௌண்டி சம்பியன்ஷிப்புக்காக யோர்க்ஷையர் கிரிக்கெட் கழகத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள பங்களாதேஷ் அணிக்கு எதிரான தொடருக்கு முன்னர், திமுத் கருணாரத்ன 4 முதற்தர போட்டிகளில் விளையாடவுள்ளார். எவ்வாறாயினும் தேசிய அணியின் பொறுப்புகள் நிறைவுபெற்ற பின்னர் திமுத் கருணாரத்ன மீண்டும் யோர்க்ஷையர் அணியுடன் இணைந்துகொள்வார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

திமுத் கருணாரத்ன கடந்த 15 மாதங்களாக டெஸ்ட் கிரிக்கெட்டில் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றார். இவர் குறித்த காலப்பகுதியில் 9 போட்டிகளில் விளையாடி 62.82 என்ற ஓட்ட சராசரியில் 1068 ஓட்டங்களை குவித்துள்ளார். திமுத் கருணாரத்ன இந்த பருவகால கௌண்டி கிரிக்கெட்டில் இணையும் இரண்டாவது இலங்கை வீரராக இடம்பெற்றுள்ளார். முன்னதாக சுரங்க லக்மால் டெர்பிஷையர் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்ற போர்த்துக்கல்

வடக்கு மசடோனியாவுக்கு எதிரான பிளேஓஃப் போட்டியில் ப்ரூனோ பெர்னாண்டஸ் இரண்டு கோல்கள் அடிக்க பீபா உலகக்கிண்ணத் தொடரில் விளையாடுவதை போர்த்துக்கல் உறுதி செய்தது.

உலகக்கிண்ண தகுதிகாண் போட்டியில் அதிகம் கவனிக்கப்படாத வடக்கு மசடோனியா ஜேர்மனியை தோற்கடித்தது. ஐரோப்பிய சம்பியனான இத்தாலியை வெளியேற்றி உலகக்கிண்ணத் தொடரில் விளையாட தகுதி பெற்றது. போர்த்துக்கல்லையும், வடக்கு மசடோனியா ஆட்டிப்படைக்கும் என எதிர்பார்த்தபோது போர்த்துக்கல் இலகுவாக வெற்றிபெற்றது.

32ஆவது நிமிடத்தில் கிறிஸ்டியானோ ரொனால்டோ கொடுத்த பந்தை பெனாண்டர்ஸ் கோலாக்கினார். பெர்னாண்டஸ் 65ஆவது நிமிடத்தில் இன்னொரு கோல் அடித்தார். 37 வயதான ரொனால்டோ 2004 யூரோவில் தொடங்கிய தனது 10ஆவது தொடர்ச்சியான பெரிய போட்டியில் விளையாடுகிறார். அவர் 4 உலகக்கிண்ணப் போட்டிகளிலும், ஐந்து யூரோக்களிலும் விளையாடி, 2016இல் ஐரோப்பிய பட்டத்தை போர்த்துக்கல்லுக்கு பெற்றுக்கொடுத்தார்.

115 கோல்களுடன் ஆடவர் சர்வதேச உதைபந்தாட்டத்தில் அதிக கோல்கள் அடித்த வீரர், ரொனால்டோ, தொடர்ச்சியாக ஒன்பது சிறந்த போட்டிகளின் இறுதிப் போட்டியில் ஒரு முறையாவது கோல் அடித்த ஒரே வீரர் ஆவார். 1991இல் முன்னாள் யூகோஸ்லாவியாவிலிருந்து சுதந்திரம் பெற்ற வடக்கு மாசிடோனியா, கடந்த ஆண்டு யூரோவில் அதன் மூன்று போட்டிகளிலும் தோல்வியடைந்து குழுநிலையை கடக்கவில்லை. ஆனால், கடந்த வாரம் இத்தாலிக்கு எதிரான அதிர்ச்சிகரமான 1-0 வெற்றியைத் தவிர, கடந்த ஆண்டு ஜேர்மனியில் அதன் ஐரோப்பிய தகுதிக் குழுவில் வெற்றிபெற்று ஆச்சரியப்படுத்தியது.







# ஒரு சிக்ஸரால் தேசிய பூங்காவிற்கு ரூ.5 இலட்சம் வருமானம்



நடப்பு ஐ.பி.எல். தொடரின் 5ஆவது லீக் போட்டியில் நேற்று முன்தினம் இரவு ராஜஸ்தான் ரோயல்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின. இந்தப் போட்டி மும்பையிலுள்ள மஹாஸ்டிரா கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடைபெற்றது. குறித்த போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முதல் வெற்றியை பதிவுசெய்தது.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் துடுப்பாட்டத்தில் தேவ்டுத் படிக்கல் 29 பந்துகளில் 41 ஓட்டங்களை குவித்தார். இதில் படிக்கல் அடித்த சிக்ஸரால் அசாமிலுள்ள காசிரங்கா தேசிய பூங்காவிலுள்ள விலங்குகளை பராமரிக்க ரூ.5 இலட்சம் கிடைத்துள்ளது. அதாவது, இந்த ஐ.பி.எல். தொடரில் ஒவ்வொரு மைதானத்திலும் பவுண்டரி லைனில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள 'டாடா பஞ்ச்' என்ற போர்டில் துடுப்பாட்ட வீரர் அடிக்கும் பந்து பட்டால் அசாமிலுள்ள காசிரங்கா தேசிய பூங்காவிலுள்ள விலங்குகளை பராமரிக்க 5 இலட்சம் ரூபா தரப்படும் என்று பி.சி.சி.ஐ. அறிவித்திருந்தது.

ஆனால், இதுவரை யாரும் அடிக்காத நிலையில், நேற்று முன்தினம் தேவ்டுத் படிக்கல் அடித்த பந்து அந்த பலகையில் பட்டது. இதன்மூலம் 5 இலட்சம் ருபா அந்த பூங்காவுக்கு கிடைத்துள்ளது.

RR vs SRH
போட்டியை காண

# ஆஸி.யிடம் வீழ்ந்த பாகிஸ்தான்: பாபர் புதிய சாதனை




அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியானது 24 வருடங்களின் பின்னர் பாகிஸ்தான் மண்ணுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை ஆஸி. அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் நேற்று முன்தினம் லாஹூரில் ஆரம்பமானது. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 313 ஓட்டங்களை குவித்தது. பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் அணி 45.2 ஓவர்களில் 225 ஓட்டங்களுக்கு சுருண்டுபோனது. இதனால் 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆஸி. அணி வெற்றிபெற்று தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

குறித்த போட்டியில் பாபர் அஸாம் 57 ஓட்டங்களை குவித்ததன் மூலம் ஒருநாள் கிரிக்கெட்டில் 4 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டினார். தனது 82ஆவது இன்னிங்ஸில் 4 ஆயிரம் என்ற மைல்கல்லை எட்டியதன் மூலம், 4 ஆயிரம் ஓட்டங்களை விரைவாக எட்டிய வீரர்களில் ஹஷிம் அம்லாவிற்கு அடுத்து இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார் பாபர்.

**கொழும்பில் அமைந்துள்ள வர்த்தக பூப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற வர்த்தக நிறுவனங்களுக்கிடையிலான 2022 பூப்பந்தாட்ட இரட்டையர் சம்பியன்ஷிப் தொடரில் செலான் வங்கி அணி சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது. டயலொக் அணிக்கு எதிராக 2 - 3 எனும் புள்ளிகள் அடிப்படையிலும், சம்பத் வங்கி அணிக்கு எதிராக 3 - 1 எனும் அடிப்படையிலும் வெற்றியீட்டி செலான் வங்கி அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்தது. இறுதிப் போட்டியில் டயலொக் அணியுடன் போட்டியிட்டு 3 - 1 எனும் புள்ளிகள் அடிப்படையில் இலகுவான வெற்றியைப் பதிவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.**



# செவிபுலனற்றோர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சம்பியனான அம்பாறை மாவட்ட அணி



*(சம்மாந்துறை நிருபர்)*

அம்பாறை மாவட்ட செவிப்புலனற்றோர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது அண்மையில் சாய்ந்தமருது வொலிவேரியன் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இச்சுற்றுப்போட்டியில் அம்பாறை மாவட்ட அணி, மட்டக்களப்பு மாவட்ட அணி, திருகோணமலை மாவட்ட அணி என செவிப்புலனற்றோர் அமைப்புகள் மூன்று அணிகளாக கலந்துகொண்டன.

இறுதிப்போட்டி மட்டக்களப்பு மாவட்ட செவிப்புலனற்றோர் அமைப்புக்கும் அம்பாறை மாவட்ட செவிப்புலனற்றோர் அமைப்புக்கும் இடையே நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாவட்ட செவிப்புலனற்றோர் அணி 10 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 86 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட நிலையில் அம்பாறை மாவட்ட அணிக்கு வெற்றி இலக்காக 87 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அம்பாறை மாவட்ட செவிப்புலனற்றோர் அமைப்பு 10 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 88 ஓட்டங்களை பெற்று வெற்றிவாகை சூடியது. இத்தொடரின் சிறந்த ஆட்டநாயகனாக ஹூசைன் ரஸ்வி, சிறந்த பந்துவீச்சாளராக தௌபீக் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.





# கல்முனை அல்—மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவர்கள் தேசிய போட்டிக்குத் தெரிவு!



*( எம்.என்.எம்.அப்ராஸ்)*

தேசிய இளைஞர் செஸ் சாம்பியன் போட்டியில் கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 05 மாணவர்கள் தேசிய ரீதியில் நடக்கவிருக்கும் செஸ் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

அம்பாறை மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான செஸ் சாம்பியன் போட்டியில் பெண்களுக்கான 14 வயதுப் பிரிவில் அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகாளான எவ்.எவ்.இல்மா, எம்.ஏ.எப். இல்பா,ஏ.ஆர்.எவ்.அனுபா ஆகியோர் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களில் வெற்றிபெற்று தேசிய ரீதியில் நடக்கவிருக்கும் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

பெண்களுக்கான 10 வயதுப் பிரிவில் நடைபெற்ற போட்டியிலும் அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகளான எஸ்.எவ்.அஜா அப்ரின், எம்.எவ்.ரிஸ்கா ஆகியோர் 1ஆம், 3ஆம் இடங்களில் வெற்றிபெற்று தேசிய ரீதியில் நடக்கவிருக்கும் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

இப்போட்டிக்காக மாணவர்களை பயிற்றுவித்து தயார்படுத்திய பாடசாலையின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களான எம்.ஜெ. முபீத், ஏ.ஜே.எம்.சாபித் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் மேற்குறித்த மாணவர்கள் அனைவரும் பாடசாலை அதிபர் எம்.ஐ. அப்துல் ரசாக் தலைமையில் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7